Registered No. M. 2385.

உ

முருகன் துணை.

விவேகபாநு

ஓர் இனிய செந்தமிழ் மாதப் பத்திரிகை.

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு"—திருக்குறள்.

ஆசிரியன்:—எஸ். கே. கோவிந்தசாமி பிள்ளை

"நன்மை கடைப்பிடி" "நாடொப்பன செய்" உத்தமனாயிரு"

மாலை-க. விபவ ௵ ஐப்பசி ௴
1928 ௵ அக்டோபர், நவம்பர் ௴ மலர்-சு.

கடவுள் வணக்கம்

காமவுட் பகைவனுங் கோபவெங் கொடியனுங்
கனலோப முழுமூட னுங்
கடுமோக வீணனுங் கொடுமதமெனுந் துட்ட
கண்கெட்ட வாங்கா ரியும்
ஏமமறு மாச்சரிய விழலனுங் கொலையென்
றியம்புபா தகனு மாமிவ்
வெழுவரு மிவர்க்குற்ற வுறவான பேர்களும்
எனைப்பற்றி டாம லருள்வாய்
சேமமிகு மாமறையி னேமெனு மருட்பதத்
திறனருளி மலய முனிவன்
சிந்தனையின் வந்தனையு வந்தமெய்ஞ் ஞானசிவ
தேசிக சிகா ரத்னமே!
தாமமொளிர் சென்னையிற் கந்தகோட் டத்துள் வளர்
தலமோங்கு கந்த வேளே!
தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே.

(6)

விநாயகர் துதி

தத்தன தனதன தத்தன தனதன
தத்தன தனதன—தனதான.

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவர்
கற்பக மெனவினை கடிதேகு
மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை யுத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவோனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட வெழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரத
மச்சது பொடிசெய்த வதிதீர
வத்துய ரதுகொடு சுப்பிர மணிபடு
மப்புன மதனிடை யிபமாகி
யக்குற மகளுட னச்சிறு முருகனை
யக்கண மணமருள் பெருமாளே.

(ஸ்ரீ நடராஜ சபை, வண்ணாரப்பேட்டை, சென்னை.)

தந்தைதாய்ப் பேண்

(இதன் பொருள்) தந்தை - (நீ உன்) பிதாவையும்; தாய் - மாதாவையும்; பேண் - (எப்போதும் பூசித்துக்) காப்பாற்று. அதாவது, மாதா பிதாக்களைக் காப்பாற்றவேண்டு மென்பதே இதன் கருத்துரையாகும்.

அன்பர்களே! நாம் கருவாகிஉதித்தபின் திங்கள் பத்தும் சுமந்து பின்னர் ஜனனகாலத்தில் சாற்றொணுக் கஷ்டப்பட்டு நம்மை ஈன்றெடுத்தும், பாராட்டி, பாலூட்டி, தாலாட்டி அன்னமுதலிய சம்ரக்ஷணை செய்தும், நமக்கு ஆயுள் நீடித்திருக்கவேண்டுமாய் அரனை வழுத்தியும் சீராட்டி வளர்த்தெடுத்த "மாதா பிதாக்"களை நமது ஆயுளுள்ளவரையில் மறக்கலாகாது.

நமக்குத் தாயுந் தந்தையுமே முதலிற் காணப்படும் தெய்வமாமென உலக மெய்ஞ்ஞானச் செல்வியாகிய ஔவைப் பிராட்டியாரும் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று மொழிந்தனர். ஆகவே, நம் மாதா பிதாக்களை வழிபடுங் கடவுளாகவே எண்ணி அவர்களிடத்தில் அன்புடனும், அச்சத்துடனும் வழிபடல் வேண்டும். தவிர.

அவர்கள் நமக்கு எங்கின்தை செய்தார்களாயினும், அதனைச் சிறிதும் குற்றமாகப் பாராட்டாது சகித்து அடக்கமென்னும் ஆபரணத்தைக் கொள்ளல் வேண்டும். நம்மைப் படைப்பித்த கடவுள் நமக்கு நன்மை தீமை இன்னது இப்படிப்பட்டதென்பதை அறியும்படியான பகுத்தறிவு முதலானவைகளைத் தந்திருக்கும் அக்கடவுளைத் தாஷித்து தெய்வ சிந்தனை யற்றிருப்போமானல், இவ்விஷயங்களைக் கடவுளறி

யாரா? அதற்குத் தகுந்த சிகிச்சை செய்யாது விடுவரா? (நம் மனதில் நடக்கும் விஷயங்களையும், இயற்றுஞ் செயல்களையும், கடவுள் கண் காணித்தே வருகிறார். அதற்குத் தக்கத் தண்டனை செய்யாது விடாரென்பது நிச்சயம். அத்தன்மைபோன்று நம்மை ஈன்றெடுத்த மாதா பிதாக்கள் நமக்குப் பல்வேறு நன்மைகளைத் தேடிய நன்றியை மறந்து அவர்களைப் புறக்கணிப்பது உத்தமர்கட் கேற்ற ஒழுங்கல்ல. மேலும்,

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்நன்றி கொன்ற மகர்க்கு"

என நாயனார் விளம்பியபடி மாதா பிதாக்க ளியற்றிய நன்றியை மறப்பின் மோக்ஷம் கிட்டாதென்பதை ஞாபகத்தில் வைக்கத்தக்கது.

மாதா பிதாக்கள் மனஞ்சலியாவண்ணம் அன்னவஸ்திரம் முதலியவை கொடுத்து அவர்களை எந்நாளும் போஷித்து வருதல் முக்கிய கடமையாகும். மேலும். அவர்கட்கு வியாதிமுதலிய துன்பங்கள்நேரிட்டகாலத்து, உடனே நம் மனம் துடிதுடித்து அவ்விடுக்கண்களைத் தீர்க்கத்தக்க பணிகளைக் கூச்சலின்றி விரைவில் செய்து முடித்தல் வேண்டும்.

அன்றியும், மாதா பிதாக்கள் மறிக்குங் காலத்தில் அவர்களைவிட்டுப் பிரியாது உடனிருத்தல் வேண்டும். அங்ஙனம். அவர்கள் மனம் கலங்கிடும்படிக்கு அலறி அழலாகாது. அவர்களுடைய மனம் ஆனந்த சாகரத்தி லாழ்ந்திருக்கும்படி பகவானுடைய திருநாமங்களையும், தேவாரம் திருவாசகம் முதலிய பாக்களையும் ஓதல் வேண்டும். இன்றேல் பக்தியிற் சிறந்த உத்தமசிகாமணிகளைக் கொண்டாவது ஓதுவித்தல் வேண்டும்.

மாதாபிதாக்க ளிறந்தபின்னர் 'உத்திரகிரியைகளைச் செய்வனே' தம்மிடத்துள்ள பொருளளவிற்குத் தக்கபடியும், விதிப்படியும், பக்தி சிரத்தையுடனும் செய்து முடித்தல் வேண்டும். பின்பு ஆண்டுகள்தோறும் அவர்கள் இறந்த திதியிலும், புரட்டாசி மாதத்தில் மகாளயத்திலும் சிரார்த்தம் செய்தல்வேண்டும். இவ்வாறு செய்பவர்களே இம்மையில் இவ்வுலகத்திற் புகழையும், மறுமையில் சுவர்க்கலோகத்தில் மோக்ஷ சாம்ராஜ்யத்தையும் அடைவ ரென்பது வேதாகமங்களின் கொள்கை.

இங்ஙனமின்றி, அனேக மதியீனர்கள் மிக வருந்திப் பெற்றெடுத்து வளர்த்து உருவாக்கியமாதாபிதாக்களை பரதவிக்கவிட்டு, தாமும்,

தம் மனைவியும், மக்களும் உண்டுகளித்து உல்லாசமாக வாழ்கின்றார்கள்! இவர்கள் உலகோர்மெச்ச "மாதாபிதாக்க" ளிறந்த பின்னர் வெகு திரவியங்களைச் செலவிட்டு "உத்திரகிரியை" முதலியவற்றை வெகு டாம்பீகமாக செய்கின்றார்கள்.

அந்தோ! இது எவ்வளவு அறியாமையாகும்! இப்பெரும் டாம்பீகத்தால் வரும் பயனென்னை? இக்கிருத்தியங்களைச் சிறிதுபொருள் செலவுசெய்து நடத்தலாமே! அதற்கு பக்தியும் சிரத்தையு மன்றோ முக்கியம்! மாதா பிதாக்கள் உயிருடன் இருக்கும்போது அவர்கள் முட்டுப்படா வண்ணம் அன்னவஸ்திர முதலியவைகள் பளித்த லன்றோ? அவசியம்.

அன்பர்காள்! மதியென்னும் அழுதையுண்டு பக்தி சிரத்தையாகிய இரு நேத்திரங்களைக் கொண்டு நமது ஞானமாதாவாகிய ஔவை மூதாட்டியார் நவின்றுள்ள "**தந்தை தாய்ப் பேண்**" என்னும் நீதி வாக்கியத்தைக் கடைபிடித்து அதன்படி யொழுகி நற்பயனை அடையத் திருவருளைப்போற்றுகின்றனம். சுபம்! சுபம்! சுபம்!!

திருவருட்சகாயம்.

"விவேகபாநு" அன்பர்களுக்கு

அன்பர்காள்!

நமது பாநு உதையமாகி இத்துடன் ஆறுமாதங்களாகின்றன. நாம் இதுகாறும் சந்தாவையேனும், வேறு எவ்வித வருமானத்தை யேனும் எதிர்பாராமல் பத்திரிகையை நடாத்திவந்திருக்கிறோமென்பது அன்பர்கட்கு நாம் சொல்லாமலே விளங்கும். மேலும் மேலும் நம் பாநுவைச் சிறந்த முறையில் நடத்துதற்குச் சந்தா நேயர்களின் ஊக்கத்தை பொறுத்திருக்கிறது. இதுவரை நம் பாநுவைப் படித்தின்புற்ற அன்பர்கள் சந்தா ரூபாயை அனுப்பி நமக்குப் போதிய ஊக்கத்தை உண்டுபண்ணும்படிக் கேட்டுக் கொள்ளுகிறோம். **பத்திராதிபர்.**

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

தஞ்சை T. S. அநுமந்தராவ் எழுதுவது

இப்புவியின்கண் மனிதர் சுகமுற வாழவேண்டுமாயின் நோயால் பீடிக்கப்படாமல் தங்கள் சரீரத்தை திடகாத்திரமாக வைத்துக்கொள்ளல்வேண்டும். சரீரசௌக்கிய முள்ளவன் சகல இன்பத்தையும் அனுபவிக்க வல்லவன். ஏழையாக இருந்தபோதிலும் அவன் பிணியால் பீடிக்கப்படாமல் இருந்தால் அதுவே பெருஞ் செல்வமாகும். ஆகையால், ஒவ்வொருவரும் தங்கள் சரீரத்தைக் காப்பாற்றிக்கொள்ளல் வேண்டும்.

நோயின்றி வாழ பின்வருபவைகளைக் கவனிக்க வேண்டும். (1) ஆகாரம், (2) காற்று, (3) தண்ணீர். 'மீதூண் விரும்பேல் என்னும் வாக்கியம் அளவுக்கு மிஞ்சி உண்ணல்'கூடாதென்று பொருள் தருகின்றது. அதிகமாக உட்கொண்டாலோ அஜீரணம் ஏற்பட்டு பலவியாதிகளை உண்டாக்குகின்றது. மேலும் நன்ருய்ப் பசித்த பின்னரே உண்ணல் வேண்டும்.

> "மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
> தற்றது போற்றி யுணின்"

அஜீரணத்தைத் தரும் உணவை நீக்கவேண்டும். கனிவர்க்கங்கள் நல்ல உணவாகின்றன. ஏனெனில் அவை தேகபுஷ்டியைத் தருகின்றன.

இரண்டாவதாக நாம் உட்கொள்ளும் காற்று சுத்தமாக இருத்தல் வேண்டும். அசுத்தமான காற்று உட்கொள்ளுவதால் நோய் ஏற்படுகிறது. நாம் வசிக்கும் வீடு நல்ல காற்று உலாவுமிடத்தில் கட்டப்படவேண்டும். வீட்டைச்சுற்றிலும் மைதானம் இருத்தல் நல்லது. சிறு செடிகளும் மரங்களும் அருகிலிருக்குமாயின் எக்காலத்திலும் நமக்கு காற்று வீசிக்கொண்டிருக்கும். தாவரங்கள் நாம் வெளியிடும் கரியமல வாயுவை கிரகித்துக்கொண்டு சுத்தமான காற்றை நமக்கு வெளியிடுகின்றன. காற்றில்லாவிடில் நாம் ஜீவித்திருக்க முடியாது. மேலும் வீட்டில் சூரிய வெளிச்சம் அவசியம் வேண்டும். அறைகளில் சாளரங்கள் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். இவ்வித சௌகரியங்கள் இருந்தால்தான் நல்ல காற்று உட்கொள்ள நமக்கு வசதியுண்டு.

மூன்றாவதாக தண்ணீரைப் பற்றி கவனிப்போம். நாம் அனுதினமும் சுத்தமான ஜலத்தில் அழுக்கு நீக்கி குளித்தல் வேண்டும்.

"கந்தை யானாலும் கசக்கிக் கட்டு
கூழா னாலும் குளித்துக் குடி"

என்றபடி மயிர்க்கால்களின் வழியாகத் தோன்றும் அழுக்கைப் படியவிடாமல் பிரதிதினமும் அதிகாலையில் உடம்பை நன்றாய்த் தேய்த்துக் குளித்தால் நோய் அணுகாது. பிராதஸ்நானம் செய்து கனிவர்க்கங்களைப் புசித்து வந்த ரிஷிகள் எவ்வாறு தேகவலிமை பெற்றிருந்தார்கள் என்பது சொல்லாமலேயே விளங்கும். ஆற்றில் நீந்துவது ஒரு தேகாப்பியாசமாகும். அப்பழக்கம் நரம்புகளுக்கு வலிமையைத்தரும். சகல இன்பத்தையும் அனுபவிக்கலாம். இதைவிரும்பாதார் எவரேனும் உண்டோ?

இதைத் தவிர நாம் உட்கொள்ளும் ஜலம் சுத்தமாக இருக்கவேண்டும். சுத்த ஜலம் கிடைக்காவிட்டால் கிடைத்த ஜலத்தை நன்றாய்க் காய்ச்சி பின்னர் அருந்தவேண்டும்.

வீடுகள் சுத்தமாக இருக்கவேண்டும். மூலைக்கு மூலை குப்பை பெருகினால் அவ்வீட்டில் நோய் பரவும். இதை முன்னிட்டே நகர பரிபாலன சபையார் தெருக்களை உடனுக்குடன் சுத்தம் செய்யும்படி கட்டளையிட்டு வருகின்றனர். சாக்கடைகளை கட்டிவைத்து அசுத்தமான தண்ணீரைத் தேங்கவிடாமல் அப்புறப்படுத்துகிறார்கள். வாந்தி பேதி அம்மைமுதலிய கொடிய நோய்கள் வராமல் தடுக்க முயற்சி செய்து வருகின்றனர். குடிகள் திடகாத்திரமுள்ளவர்களாயிருக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் மேற்சொன்ன விஷயங்கள் கவனிக்கப்பட்டு வருகின்றன.

தேகாரோக்கியமே சிறந்தது. அதுவே சகல இன்பத்தையும் அளிக்கத்தக்கது. எவ்வளவு பொருள் படைத்தவனாய் இருந்தபோதிலும் நோயில்லாமல் வாழ்ந்தால் ஒழிய அவனுக்கு சுகம் ஏற்படாது. சரீர சௌக்கியமே தேகவலிமையை உண்டாக்கக்கூடியது. ஒவ்வொருவனும் தன் வேலையை சரிவர முடித்து கியாதி பெறவும் வழி உண்டு. ஆகையால் வாலிபத்தில் துற்நடத்தையில் பழகி சரீரம் கெட்டு ஆயுளைகுறைத்துக்கொள்ளாமல் நன்னடத்தையை மேற்கொண்டு சுகாதார விதிகளை அசட்டை செய்யாது அவற்றைப் பின்பற்றி ஒழுகினால் நாம் அனைவரும் சுகமுற வாழலாம். இதன் மூலமாய் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்குவித புருடார்த்தங்களையும் அடையலாம்.

கடவுள் அருள்புரிவாராக.

:: ஆராய்ச்சிப்பகுதி ::

பாண்டிய மன்னர்களின் சிறந்த ஆட்சி

[இது சென்னை "இந்தியன் ரெவியூ" பத்திரிகையில் ஸ்ரீமான் வி. ஜி. ராமகிருஷ்ணய்யர் எம். ஏ. எல். டி. எழுதிய கட்டுரையின் மொழிபெயர்ப்பு.]

முன் தொடர்ச்சி.

பொதுவாக அவைகளெல்லாம் நாட்டவரின் முன்னேற்றத்திற்கும், அவர்களின் அறிவு வளர்ச்சிக்கும், ஆத்மஞான வளர்ச்சிக்கும் பெரிதும் துணையாக இருந்து வந்தன என்றே சொல்லலாம்.

பாண்டியநாடும் தமிழ் மொழியும்

தமிழ்மொழி வளர்ச்சிக்கும் தமிழ் பாஷைக்கும் பாண்டிய நாடே பெயர்பெற்ற வீடாக இருந்து வந்ததென்பதை நாட்டவர் நன்கு அறிவர். தமிழ் சர்வகலாசாலைகளென்ன, தமிழ் சங்கமெல்லாம் இவைகள் பாண்டிய நாட்டில் மிகவும் வளரப்பெற்றோங்கி யிருந்தன. பாண்டிய நாட்டை ஆண்டுவந்த பாண்டிய மன்னர்கள் கல்வியிலும் குணத்திலும் சிறந்தவர்களாக இருந்து வந்ததினால் அவருடைய காலத்தில் தமிழறிஞர்களையும்,புலவர்களையும்,கவிராயர்களையும் அவர்கள் பெரிதும் ஆதரிக்கப்பட்டு வந்தார்கள். பாண்டிய நாட்டை ஆண்டுவந்த மன்னர்கள் தமிழ்ப் புலவர்களையும், கவிராயர்களையும் பெரிதும் மதித்து கௌரவமாக நடத்தி வந்தார்களென்பது பல தமிழ் நூல்களிலிருந்து நன்கு விளங்குகின்றது. பாண்டிய மன்னர்களிற் சிலர் பெரியகவிவானர்களாக இருந்து வந்தார்களென்றும் சரித்திரங்களிலிருந்து புலனாகின்றது. நெடுஞ்செழியப் பாண்டியராஜன் மாங்குடி மருதனார் என்ற தமிழ் அறிஞரை ஆதரித்து வந்ததாகத் தெரிகிறது. கேரு பாண்டிய மன்னன் திருஞான சம்பந்தம் என்ற பெரியாரை மிகவும் மரியாதையோடு கௌரவமாக நடத்தியதாகத் தெரிகின்றது. திருநெல்வேலியி லிருந்து வந்த வீரபாண்டிய மன்னன் காசிகாளியார் என்ற கவிராயரை ஆதரித்து வந்தானென்று தெரிகிறது. பாண்டிய மன்னர்களுக்குள் கவிதா சக்தி வாய்ந்த அதிவீர

ராம பாண்டிய மன்னனைப்பற்றியும், வரகுணராம பாண்டியனைப் பற்றி யும் தமிழ் நாட்டவர்கள் அறிந்திருப்பார்களென்பதில் சிறிதும் ஐய மில்லை.

பாண்டிய மன்னர்களுடைய காலத்தில் தமிழ் பாஷையும், தமிழ் கலை ஞானமும் மிகவும் உயர்ந்த நிலையில் இருந்து வந்தபோதிலும், அக்கா லத்தில் இருந்துவந்த தமிழர்களில் சிலருக்கே, தமிழ் நூல்களை வாசிக்க வும், தமிழில் எழுதுவதற்கும் திறமை இருந்து வந்ததாகத் தெரிகிறது. பண்டைச் சிலாசாஸனங்களி லிருந்து அக்காலத்தில் இருந்து வந்த தமிழர்களில் பெரும்பான்மையோர் எழுதப் படிக்கத் தெரியாதவர்க ளாகவே இருந்து வந்தார்களென்று தெரிகின்றது. பண்டை நாட்களில் நமது தமிழ் நாட்டிலிருந்தவர்கள் பனை ஓலையையும், கற்களையும், செப் புத் தகடுகளையும் எழுதுவதற்கு உபயோகித்து வந்தனரென்று தெரி கிறது.

பாண்டிய மன்னர்களின் அரசிறையும் மாண்பும்

பாண்டிய மன்னர்களால் பிராமணர்களுக்கு இறைமாக அளிக்கப் பட்ட நிலங்களுக்கு "பிரம்மதேயம்" என்ற பெயர் அக்காலத்தில் வழங் கப்பட்டு வந்ததாகத் தெரிகிறது. தர்மசாலைகளுக்கும், தேவாலயங்களுக் கும் வழங்கப்பட்ட இறைம் நிலங்கள் "தேவதானம்" என்ற பெயரால் அக்காலத்தில் அழைக்கப்பட்டன. பாண்டிய அரசர்களின் அரசிறை யைப் பற்றிய விஷயங்கள் மிகவும் ஆச்சரியத்தை யுண்டுபண்ணக் கூடிய தாகவும், அறிந்துகொள்ள வேண்டியதாகவும் இருக்கின்றன. பாண்டிய நாட்டிலுள்ள கிராமங்கள் தோறும் பலவித தொழில்களைச் செய்து வந் தவர்கள் குடியேறி வசித்து வந்ததாகத் தெரிகிறது. பாண்டிய மன்னர் கள் தங்களது குடிகளிடத்திலிருந்து ஒருவிதமான தொழில் வரியும் வசூல் செய்து வந்ததாகத் தெரிகின்றது. நெசவுக்காரர்களிடத்திலிருந் தும், இடையர்களிடத்திலிருந்தும், குதிரை வியாபாரிகளிடத்திலிருந் தும் அவர்கள் வசூலித்து வந்த தொழில்வரி "கடமை" "பட்டம்" என்ற பெயரால் அக்காலத்தில் அழைக்கப்பட்டு வந்ததென்று தெரி கிறது.

நிறை அளவு முதலியன

பண்டைப் பாண்டிய மன்னர்கள் காலத்தில் இருந்த நிறைகளும், அளவுகளும், படிகளும் பல நூற்றாண்டுகள் வரையில் அங்கு இருந்து

வந்ததாகத் தெரிகிறது. "சுந்தர பாண்டியன்கோல்" "ராஜ ராஜன் கோல்" என்றும் அளவுகள் இருந்தன வென்று சிலாசாஸனங்களிலிருந்து விளங்குகின்றன. அந்தக் கோல்களின் சரியான அளவு என்ன என்பது தெரியவில்லை. அக்காலத்தில் அடியென்று வழங்கப்பட்டு வந்தது. மனிதர்களின் பாத அளவே யாகும். பண்டைதானிய அளவுகளின் விபரம் பின்வருமாறு:—

5-செவுடு—1-ஆழாக்கு	8-நாழி—1-குறுணி
2-ஆழாக்கு—1-ஒழக்கு	2-குறுணி—1-பதக்கு
2-ஒழக்கு—1-உரி	3-குறுணி—1-முக்குறுணி
2-உரி—1-நாழி	2-பதக்கு—4-தூணி

தங்கம், வெள்ளி முதலிய உலோகங்கள் அக்காலத்தில் நிறுக்கப்பட்டு வந்தவிகிதம் பின்வருமாறு:—

40-காணி—1-மாஞ்சடி	2-குன்று—1-மாஞ்சடி
4-காணி—1-மா	20-மாஞ்சடி—1-காஷாஞ்சி

அக்காலத்தில் சில இடங்களில் அளவுகளும், நிறைகளும், மூர்த்திகளின் பெயரினாலும், தெய்வங்களின் பெயர்களாலும் வழக்கப்பட்டு வந்ததாகத் தெரிகிறது.

நாணயமுறையும் வியாபாரமும்

பண்டை நாட்களில் பாண்டிய நாட்டில் நாணயங்கள் மிகவும் அருமையாகவே உபயோகிக்கப்பட்டு வந்ததாகத் தெரிகிறது. நாணயங்களுக்கு உபயோகப்படுத்தப்பட்ட தங்கம், வெள்ளி முதலிய உலோகங்கள் மற்ற தேசங்களிலிருந்து பாண்டிய தேசத்தில் இறக்குமதி செய்ய வேண்டியதாக இருந்ததனால் தான் அக்காலத்தில் நாணயங்கள் அருமையாக வழங்கப்பட்டு வந்தன வென்று தெரிகிறது. அக்காலத்தில் நம் நாட்டிலிருந்து வந்தவர்கள் தங்களது அரிய சாமான்களை கிரேக்க வியாபாரிகளிடத்திலும்; இடாலிய வியாபாரிகளிடத்திலும் கொடுத்து அவைகளுக்குப் பதிலாகப் பொன் நாணயங்களைப் பெற்று வந்தார்களென்று தெரிகிறது. பாண்டிய மன்னர்களின் காலத்தில் நமது நாட்டிலிருந்து வந்த தமிழர்கள் தங்கம், வெள்ளி முதலிய உலோகங்களில் பல அழகான நகைகளையும் ஆபரணங்களையும், பல சித்திர வேலைப்பாடுடன் கூடிய அழகிய சாமான்களையும் செய்து வந்ததாகத் தெரிகிறது. அக்காலத்தில் செய்யப்பட்ட ஒப்புயர்வற்ற அழகிய நகைகளும், மிக

வும் வேலைப்பாட்டுடன் கூடிய சாமான்களும் விலைமதிப்பில்லாத ஆபரணங்களிலும், சாமான்களிலும்சில இப்பொழுது அன்னியநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பதாக காணப்படுகிறது.

மதமும் பொது ஜனங்களும்

மத சம்பந்தமான விஷயத்தில் அக்காலத்திலிருந்து வந்த சாதாரணமான ஜனங்கள் எப்பொழுதும் திராவிடர்களின் வழக்க ஒழுக்கங்களையே பின்பற்றி நடந்து வந்ததாகத் தெரிகிறது. ஆரியர்களின் இந்து மதம் அக்காலத்திய சாதாரண மக்களால் அனுஷ்டிக்கப்படாமல் ஏட்டுச் சுரக்காயாகவே இருந்து வந்ததென்று சொல்லலாம். பெரிய தேவாலயங்களெல்லாம் ஆரியர்களின் தெய்வங்களுக்காகவே கட்டப்பட்டிருந்தன. ஆனால் அந்தப் பெரிய தேவாலயங்களுக்கு அக்காலத்திலிருந்து வந்த சாதாரண ஜனங்கள், உத்ஸவ காலங்களைத் தவிர மற்ற நாட்களில் செல்லுவதேயில்லை. அவர்கள் தினந்தோறும் தங்களது குலதேவதைகளையும் ஆராதித்து வந்தார்கள். பிசாசுகளுக்குச் சாந்திசெய்து வந்தனர். அவர்கள் தங்கள் குலதேவதைகளை இம்மைக்குரிய சுகத்திற்காக வழிபட்டு வந்தனர். பிசாசுகளினால் ஏற்படுகின்ற அபாயத்திலிருந்தும் கஷ்டங்களிலிருந்தும் தங்களைக் காத்துக்கொள்ளுவதற்காக அவைகளுக்கு மிருகங்களைப் பலி கொடுத்து பூஜித்து வந்தனர். அக்காலத்தில் மரங்களெல்லாம் பிசாசுகளுக்கு இருப்பிடமென்று சாதாரண ஜனங்களால் கருதப்பட்டு வந்தது. நாட்டில் எங்கும் சர்ப்பங்களை வணங்கி வந்ததாகவும் தெரிகிறது. கி. மு. இரண்டாவது நூற்றூண்டிலிருந்து கி. பி. 8-வது நூற்றூண்டு வரையில் நாட்டில் பௌத்த மதத்திற்கு மிகுந்த செல்வாக்கு இருந்துவந்ததாகத் தெரிகிறது. ஒரு காலத்தில் பாண்டிய நாட்டில் ஜயின மதமும் மிகச் சிறப்புற்றோங்கி யிருந்ததாகக் காணப்படுகிறது.

பண்டைத் தமிழர்களின் வீரம்

புராதன காலத்தில் பாண்டிய நாட்டில் வசித்து வந்த தமிழர்கள் யுத்தத்தில் கைதேர்ந்த வீரர்கள். நாட்டவர்களால் மிகவும் மரியாதையாகவும், கௌரவமாகவும் நடத்தப்பட்டு வந்தார்கள். பல பழந்தமிழ் வீரர்களின் ஞாபகார்த்தமாக அவர்கள் பிறந்த இடத்தில் அவர்களைப் பற்றிய விஷயங்களைக் கற்களில் எழுதி அக்காலத்திலிருந்தவர்கள் புதைத்திருக்கின்றனர். அவைகளில் பல இன்னமும் சில கிராமங்களில் காணப்படுகின்றன.

பண்டைக் கப்பல் வியாபாரம்

கடற்கரை யோரத்தில் வசித்துவந்தவர்களில் பெரும்பான்மையோர் அக்காலத்தில் சிறந்த மாலுமிகளாக இருந்துவந்தனர். கப்பம் கட்டும் தொழிலும், கப்பல் வியாபாரமும் அக்காலத்தில் நமதுநாட்டில் மிகவும் சிறப்புற்றோங்கியிருந்தது. கி. மு. 5-வது நூற்றாண்டில்நடைபெற்ற கப்பல் வியாபாரத்தைப்பற்றி புத்தர்களின்ஜடாகாக்களிலிருந்து நன்கு விளங்குகிறது. மேற்குக்கரைத் துறைமுகங்களிலிருந்து கப்பல்கள் புறப்பட்டு மேற்கு ஆசியாவிற்கும், பாபிலோன் முதலிய பட்டணங்களுக்கும் சென்று வியாபாரம்செய்து வந்ததாகத் தெரிகிறது. கி.பி. 1-வது நூற்றாண்டிலே தான் ரோமாபுரியினர்கள் தென்இந்தியாவோடு கப்பல் வியாபாரம் செய்துவந்தனர். அவர்கள்பாரசீக வளைகுடாவிலும், இலங்கைத்தீவிலும் பெரும் வியாபாரம் செய்துவந்ததாகத்தெரிகிறது. ரோமாபுரியிலிருந்த சரித்திர ஆசிரியரான ஸ்ரீமான் பிளினி என்ற பெரியார் "இலங்கையோடு வியாபாரம் செய்கின்ற இந்தியக்கப்பல்கள் 3000 பெரிய ஜாடிகளைத் தூக்கிச் செல்லக்கூடிய அளவு பெரிதாகஇருக்கின்றன" என்று கூறியிருக்கின்றார். ஆந்தரர்களின் நாணயங்களில் பெரும்பான்மையானவைகளில் இரண்டு பாய்கள் கட்டிய கப்பல்களின் உருவம் அச்சடிக்கப்பட்டவைகளாக இருக்கின்றன. பண்டைத்தமிழர்களின் கப்பல் வியாபாரத்தை உறுதிப்படுத்துவதற்கு அவைகளே தக்க சான்றாக விளங்குகின்றனவல்லவா?

வாழ்க்கை துணை நலம்

எம். ராஜமாணிக்கம் எழுதியது

(ஸ்ரீ நடராஜ சபை, வண்ணாரப்பேட்டை, சென்னை.)

தற்கால நவீன நாகரீகத்தில் நம் இந்தியமாதர்கள் முழுகிக் கரையறியாவண்ணமும், கரையடையப் பிரியப்படாவண்ணமும் இருக்கின்றனர். காரணம் என்னை? ஆங்கிலபாஷையைக்கற்று, நன்மொழிபுகலும் தாய்ப்பாஷையாகிய தமிழைக்கற்காததே காரணம். தமிழைப்படித்தா

என்று ஔவை கூறிய வண்ணம் நாயகனுக்கு நேர்மாருட்டக் குண முடைய நாயகியானால், நாயகன் இல்லறத்தை விட்டேக வேண்டியதே. ஆக, பெண்களே சகலத்திற்கும் காரணமாக விளங்குகிறார்கள்.

உலகம் ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே தான். ஆதலால், இந்திய தமிழ்ச் சகோதரிகளே! உங்கள் வாழ்க்கையைப் பயன் படுத்துங்கள்! தக்ககாலத்தே மனதுக்கிசைந்த மணமகனைத்தேடி மணந்து இல்லறத்தை நடத்துங்கள்! நம் முன்னோரான நளாயினி, தமயந்தி, அநுசூயா, அருந்ததி, திரௌபதி, சந்திரமதி, வாசுகி முதலிய கற்பரசிகள் கோரிய வழியைப் பின்பற்றுங்கள்! தமிழின் மேன்மையை விளக்குங்கள்! தமிழ் நாட்டைச் சிறப்பியுங்கள். இந்திய நாட்டை முன்னேற்றத்திற்குக் கொண்டுவருவது உங்கள் காரியமேயன்றி ஆண்களான எங்கள் காரியமன்று. அதர்மம் மலிந்துள்ள இக்காலத்தில், தர்மத்தைக்கொண்டுதான் நாம் அதர்மத்தை வெல்லவேண்டும். அத்தருமம் உங்களால்தான் அடையப் படுவது. ஆதலால், அநாகரீகச் செயல்களை அறவேநீக்கி, இந்திய நாகரீகத்தைக் கைக்கொண்டு முன்னேற்றம் அடைவீர்களாகுக. சுபம்! சுபம்!!

மதனசுந்தரத்தின் மர்மம்

மானேஜர், ஸ்ரீ ஆனந்தகான ஸபா, கரிசூழ்ந்த மங்கலம்

K. T. ஹரிஹரபுத்ர சர்மா எழுதுவது

முன்னொருகாலத்தில் ஓர் ஊரில் ஹரிஹரன் என்ற ஒருவனிருந்தான். அவனது மனைவி இருபெண் குழந்தைகளையும், இரு ஆண் குழந்தைகளையும் ஈன்றாள். பெண்களுள் மூத்தவள் பெயர் பொன்னம்மாள். இளையவள் பெயர் ரஞ்சிதம். பொன்னம்மாளுக்குப் பதிமூன்று வயது நிறம்பும்போதே அவளது தகப்பன் இறந்துவிட்டான். ஆனதுபற்றி மாங்கல்யத்தை இழக்கநேரிட்டது. அவளின் தாயார் தனது சிறு குழந்

தைகளை காப்பாற்ற வேண்டிய சுமதலை ஏற்றுக்கொண்டு வரும்போது தனது மூத்தப் பெண்ணுக்கு விவாகம் நடத்தவேண்டுமென்ற கவலை ஏற்பட்டது. என்னசெய்வாள் பாவம்! இது இப்படி யிருக்க மூத்தப் பெண்ணுகிய பொன்னம்மாளின் அதிரூபலாவண்யத்தைக் கண்டு அநே கம்பேர் கடுமோகங் கொண்டு அவளை மணம்புரிய இச்சித்தனர். இப்படி அவளை மணக்க இச்சித்தவர்களான மதனசுந்தரன் என்னும் குரூபி ஒருவன். அவன் குரூபியாயிருந்தபோதிலும் ஓர் செல்வச் சீமான். இதையறிந்த பொன்னம்மாளின் தாயார் தனது மகளை மதனசுந்தரத்திற்கே மணமுடிப்பதாக நிச்சயித்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலானுள்.

ஆனுல், பொன்னம்மாளுக்கு இவனை மணக்கச் சம்மதமில்லை. இருந்தாலும் 'தாய் சொற்றுறந்தால் வாசகமில்லை' என்ற பழமொழிப்படி தாயாரது கட்டளையை மறுக்கமாட்டாமல் அவனை மணக்க உடன்பட்டு நிச்சயதாம்பூலம், முகூர்த்தம் முதலானதுகள் யாதொரு குறைவுமில்லாமல் நிறைவேறிற்று. மணமுடிந்த பிறகு பொன்னம்மாள் தனது மணவாளனுகிய மதனசுந்தரத்துடன் அவனது இல்லமாகிய ஓர் அழகிய பங்களாவிற்கு ஏகினுள். அங்கு அவளுக்கு வேண்டிய சௌகர்யங்களெல்லாம் சரியாக நிறம்பியிருந்தன. இப்பேர்ப்பட்ட இல்லத்தில் பொன்னம்மாளும், மதனசுந்தரமும் இல்லரம் நடத்திவரும் ஒருநாள் அவ்விபத்தை சுற்றி பார்த்துக்கொண்டு வருகையில் ஓர் அறை தென்பட்டது. அந்த அறையைச் சுட்டிக்காட்டி ஏது அவ்வரைப் பூட்டப்பட்டிருக்கிறது? அவ்வறையின் மர்மம்தானென்ன? என்று கேட்டாள்.

இக்கேள்வி அவள் வாயினின்று பிறந்த மறுநிமிடமே மதன சுந்தரத்தின் மீசை துடித்தது. முகம் கருத்தது. கண்கள் சிவந்தது. உடனே அவன் அவளுடன் ஒரு வார்த்தையும் பேசாது திடீரென்று அவ்விடத்தைவிட்டு அகன்றுன். அது முதல் சிலநாள்வரை அவளுடன் பேசவேயில்லை சிலநாள் சென்றபிறகு ஒருநாள் பொன்னம்மாள் அவன் காலில் விழுந்து தான் அவ்வறையைப்பற்றி இனிமேல் ஒருவார்த்தையும் சொல்லவில்லை என்று சொன்னுள். உடனே மதனசுந்தரம் தான் இவ்வாறு அவளிடம் நடந்துகொண்டதற்காக வருத்தப்பட்டு இனிமேல் அவ்விஷயத்தை அடியோடு மறந்துவிடுமாறு சொல்லி, முன்போல் இவர்கள் இல்லரம் நடத்தலானுர்கள். அதில் சிலநாட்கள் சென்றபின் தனது கொத்துச் சாவியை பொன்னம்மாளிடம் கொடுத்துவிட்டு தான் அயலூருக்குப் போவதாயும், தான் போயிருக்கு மச்சமயத்தில் அச்சாவிக

ளின் உதவியால் அவளுக்கிஷ்டமான எந்த அறையை வேண்டுமானு லும் உபயோகப்படுத்திக் கொள்ளலாமென்று சொன்னுன். அதுவுமல் லாமல் அக்கொத்திலிருக்கும் சிறிய சாவியாகிய அம்மர்ம அறையின் சாவியை மாத்திரம் உபயோகப்படுத்தக் கூடாதென்று சொல்லிவிட்டுச் சென்றுன். அவன் சென்ற பிறகு தனக்கிஷ்டமான ஒவ்வொரு அறை யையும் திறந்து பார்த்துக்கொண்டே வந்தாள். அந்த மர்ம அறையை யும் மறக்காமல், அவ்வறையின் அருகிற் சென்று, நாம் ஏன் அம்மர்ம அறையைத் திறந்து பார்க்கக்கூடாது? அதில் என்ன அதிசயமிருக்கும் என்று பலவாராக நினைத்து மாடிமேலிருக்கும் அவ்வறைக்குப் போவ தென்று முடிவு செய்துக்கொண்டு, மாடியின்மீது ஏற ஆரம்பித்தாள். அச்சமயம் வாயிற்கதவு தட்டப்படும் சப்தம் கேட்டது.

உடனே பொன்னம்மாள் மாடியினின்று கீழ் இறங்கி வாயிற் கத வைத் திறந்தாள். திறந்ததுதான் தாமதம், தனது சகோதரியான ரஞ் சிதம் உள்ளே நுழைந்தாள். உடனே சகோதரிகளிருவரும் ஒருவருக் கொருவர் ஆலிங்கனம் செய்துக்கொள்ளலாயினர். தங்களின் க்ஷேம சமாசாரங்களை விசாரித்துக் கொள்ளலாயினர். பிறகு ரஞ்சிதம் உனது கணவர் அயலூருக்குச் சென்றிருக்கிறுர் என்று கேள்விப்பட்டேன். அச்சமயம் நீ தனிமையா யிருப்பாயேயென நினைத்து, உன்னுடன் உனது கணவர் வருமளவும் வசிக்கலாமென வந்தேன் என்று சொன் னுள். இந்த வார்த்தையைக் கேட்டதும் பொன்னம்மாளுக்கு மட்டிற் கடங்காத மகிழ்ச்சியையுண்டுபண்ணிற்று, அதுமுதற்கொண்டு அவ்வீட் டில் அவ்விரு சகோதரிகளும் சேர்ந்து வசித்து வரலாயினர். ஒருநாள் பொன்னம்மாள் தான் மாத்திரம் அக்கொத்துச் சாவியை எடுத்துக் கொண்டு அம்மர்ம அறைக்குச் செல்லலுற்றுள். அங்கு சென்று பூட் டைத் திறப்பதின் நிமித்தம் அவ்வறையின் பூட்டின்மீது தனதுகைகளை வைத்தாள். அச்சமயம் அவளது கைகள் படபடவென நடுங்கிற்று, முகத்திலிருந்து வியர்வை பொழிந்தது, உள்ளே என்ன இருக்குமோ வெனப் பயந்தாள். ஓடிவிடலாமோவென நினைத்தாள். ஒரு நிமிஷத்தில் இத்தனை மாறுதல்களும் அவளிடத்திலுண்டாயின. கடைசியில் சீ! நாம் எதற்காகப் பயப்படவேண்டும்? இம்மர்ம அறையின் உள்ளே என்னதா னிருக்கப் போகிறது? அதையுந் தான் பார்ப்போமே என மனதில் எண்ணி அக்கதவைத் திறந்துகொண்டு பயத்துடன் உள்ளே நுழைந் தாள். உள்ளே அமைக்கப்பட்டிருந்த சாளரக் கதவுகளெல்லாம் தாளி டப்பட்டிருந்தமையால் இவளுக்கு முதலில் அவ்வறை முழுவதும் இருட்டாகவே யிருந்தது. பிறகு சிறிது ஊன்றிப் பார்த்தளவில் உள்

ளேயிருக்கும் ஓர் கோரகாட்சியைக் கண்டு அலர ஆரம்பித்தாள். அக்காட்சி யென்னவென்றால் நமது மதன சுந்தரத்திற்கு, பொன்னம்மாளுக்கு முன் மனைவிமாராக இருந்த பெண்டிரெல்லாம் இரத்தத்தில் தோய்ப்புண்டிருந்தனர். அக்கோரக்காட்சியைக் கண்டு மனம் விண்டு அப்படியே கற்சிலைபோல் ஸ்தம்பித்து நின்றுவிட்டாள். அச்சமயம் அச்சத்தினால் அவளது கைகள் நடுங்க ஆரம்பித்து கையிலிருந்த சாவி அவளையறியாமலே அவளது கையிலிருந்து நழுவி கீழே விழுந்ததுமல்லாமல், அக்காட்சியை திடீரென கண்ணுற்றதால் அவளும் மூர்ச்சையடைந்தாள். சிறிதுநேரம் சென்ற பிறகு முன்போல் ஸ்மரணை வந்தது. உடனே அவள் எழுந்திருந்து கீழேவிழுந்தசாவியை எடுத்துக்கொண்டு கதவை முன்போல பூட்டிவிட்டுத் தன்னறைக்குச் செல்லலுற்றாள்.

அப்படிச் செல்லுகையில் அச்சிறிய சாவியில் இரத்தம் தோய்ப்புண்டிருத்தலைக் கண்டு அச்சங்கொண்டு அவ்விரத்தக்கரையை துடைக்கலாயினள். அக்கரையானது துடைக்கத் துடைக்க அழியாமல் மிகவும் பிரகாசமாய் விளங்கலுற்றது. இதைக்கண்ணுற்ற அவள் அச்சாவியைத் தொலைக்கப் பலவழியில் முயன்றனள். முதலில் அச்சாவியைக் கிணற்றில் போட்டுவிடலாமா என்று யோசித்தாள். பிறகு தோட்டத்தில் புதைத்து விடலாமா என்று யோசித்தாள். கடைசியில் அச்சாவியை தனது மேஜை பெட்டியில் ஒருவருக்கும் காணாதபடி பத்திரம் செய்து விட்டு, தனது கனவன் வந்து சாவியை எங்கே யென்று கேட்டால் என்ன சொல்வதென்று யோசித்துக்கொண்டிருக்குமளவில் யாரோ வாயிற்கதவைத் தட்டும் சப்தம் காதில் விழுந்தது. உடனே சென்று கதவைத் திறக்குமளவில் தனது கணவனான மதன சுந்தரன் உள்ளே நுழைந்ததைக் கண்டாள்.

மதனசுந்தரன் உள்ளே நுழைந்ததும் சிரமபரிகாரம் செய்துக் கொண்ட சிறிது நேரத்திற்கெல்லாம் தான் கொடுத்துவிட்டுச்சென்ற கொத்து சாவியை எங்கே என்று கேட்டான். அதற்கவள் மறுநாள் தருவதாகப் புகன்றாள். அவ்வாறே மதன சுந்தரன் மறுநாள் கேட்கையில் அச்சாவியை எங்கேயோ மறதியாக வைத்துவிட்டது போலவும், தானதை எங்கெங்கே தேடுவது போலவும் பாசாங்கு செய்ய ஆரம்பித்தாள். இதையறிந்த மதனசுந்தரன் அச்சாவியை கொண்டுவராவிடில் அவளைக் கொல்வதாக பயமுறுத்த, அவள் இரத்தக் கரைபடிந்த அச்சாவியை அவனிடம் கொண்டுவந்து கொடுத்தாள். அதைப்பார்த்த மதனசுந்தரன் அச்சாவியில் இவ்வித இரத்தக்கரை வந்ததின் காரண

மென்ன வென்று கேட்டான். அப்பொழுது அவள் அவனது இருபா தங்களில் வீழ்ந்து உள்ளதை யுள்ளபடியே நவின்று தன்னை மன்னிக்கு மாறு வேண்டிக்கொண்டாள். அதையுணர்ந்த மதனசுந்தரன் பொன் னம்மாளைப் பார்த்து 'நீயும் அம்மர்ம அறையிலுள்ளவர்களின் கதி யையே அடைவாய்' எனச் சொல்லி அவளுக்கு நான் சாவுக்குத்தயார் செய்து கொள்வதற்காக ஏழரை நிமிடக்கெடு கொடுத்திருப்பதாயும் கோபத்துடன் சொன்னான். இதையறிந்த பொன்னம்மாள் பயத்துடன் மாடியிலிருக்கும் தனது தங்கை ரஞ்சிதாவிடம் சென்று தெரிவித்தாள். உடனே ரஞ்சிதம் நீ இதைப்பற்றி பயப்படவேண்டாம். ஏனெனில் இன்றையதினம் நமது சோதரர்கள் இவ்வில்லத்திற்கு வருவதாகசொல் லியிருக்கின்றனர். நீ அந்த கெடுவு வரும்வரை அவனிடம் போகாமல் காலதாமதஞ் செய்துகொண்டிரு. நான் இவ்வுப்பரிகையில் நின்று கொண்டு நமது சகோதரர்கள் தூரத்தில் வருவது தெரிந்தால் சீக்கிரம் வரும்படி சமிக்ஞை செய்கிறேன் என்று சொல்லிவிட்டு உப்பரிகை யில் நின்றுகொண்டு சோதரர்களின் வரவை எதிர்பார்த்திருந்தாள். சோதரிகள் பேசிமுடித்த இச்சமயத்தில் கீழிருந்த அவன் வாயிலிருந்து ஐந்து நிமிஷம் ஆய்விட்டது. நான் இங்கே காத்துக்கொண்டிருக்க முடி யாது கீழே சீக்கிரம். என்று கோபத்துடன் கலந்த ஓர் சப்தம் போட் டான்.

இதைக்கேட்ட அவள் இடியேறுண்ட அரவம்போல் கலங்கி 'ஒரு நிமிடத்தில்' என்று சொல்லி விட்டு, 'ரஞ்சிதம்' நமது சோதரர்கள் வருகிறார்களா? என்று பரிதாபகரமான பார்வையுடன் வினவினாள். அச்சமயம் அவளுக்கு ஒவ்வோர் நிமிடமும் ஒவ்வோர் யுகம்போல் கழி வதுபோல விருந்தது. ரஞ்சிதம் ஒருவரும் வரவில்லை என்றாள். இச்சம யம் மதன சுந்தரத்தின் வாயிலிருந்து 'ஏழுநிமிடம்' என்ற சத்தம் பிறந் தது. உடனே பொன்னம்மாள் இதோ வந்துவிட்டேன். என்று சொல் லிவிட்டு ரஞ்சிதம் யாராயினும் வருகின்றார்களா? என்று கீழே இறங் காமல் மிருதுவான குரலில் கேட்டாள். 'தஞ்சம்' ஆம் யாரோ வருகி றாப்போல் தோன்றுகிறது. ஏனெனில் தூரத்தில் தூசுகள் கிளம்புகின் றன என்றாள். அப்படியானால் நான் காப்பாற்றப்பட்டேன் என்று சந் தோஷத்துடன் பொன்னம்மாள் ஆரவாரித்தாள். ஆனால் மறுபடியும் 'ரஞ்சிதம்' அங்கே தூசுகளைக் கிளம்பினது மனிதரல்ல சில ஆட்டு மந் தைகள் தூசுகளை கிளப்புகின்றன என்றாள். இச்சமயம் நீ கீழே இறங்கி வராவிட்டால் நானே மாடியிலேறி வந்து உன்னைக் கொல்வேன் என்று கர்ஜித்தான் மதனசுந்தரன். இத்தருணம் ரஞ்சிதம் அவளை போகவேண்

டாமென்று தடுத்து சோதரர்கள் வருகிறார்கள்! என்று சந்தோஷத்துடன் நவின்று அவர்களை சீக்கிரம் வரும்படி சமிக்ஞை காட்டினாள்.

உடனே அவர்கள் வாயுவேக மனோ வேகமாக வரலாயினர். இச்சமயம் மதன சுந்தரன் அவ்விருபெண்களு மிருக்கும் அறைக்குள் நுழைந்தான். இவனது வருகைபார்த்த பொன்னம்மாள் பயத்துடன் இன்னும் ஒரு நிமிஷக்கெடுவு கொடுக்குமாறு வேண்டிக்கொண்டாள். இவளது வேண்டுகோளை அசட்டை செய்துவிட்டு ஏற்கெனவே குறித்த கெடுவிற்கு மேலாய்விட்டது என்று சொல்லி அவளைக் கொல்வதன் நிமித்தம் கத்தியை நோக்கினான். இச்சமயம் சோதரர்களிருவரும் வீட்டிற்குள்ளே நுழைந்தனர். இவன் கத்தி ஓங்குவதைக் கண்டு அவனைப் பிடிப்பதன் நிமித்தம் ஓடினர். இதையறிந்த அவன் கத்தியை கீழே போட்டுவிட்டு தப்பியோட முயன்றான். உடனே சகோதரர்களிருவரும் அவன்மீது ஒரேப் பாய்ச்சலாய் பாய்ந்து அவனை பிடித்திழுத்து அவனது கத்தியினாலே அவனை வெட்டி வீழ்த்தினார்கள். கடைசியில் மதன சுந்தரன் பிறர்க்கு வெட்டிய படுகுழியில் தானே வீழ்ந்து அழுந்தினான். பிறகு அக்கொடியோனின் சொத்துக்களைக் கைப்பற்றிக் கொண்டு தனது வாழ்நாளை கழிக்கலானார்கள்.

"எங்கும் மங்களம் பொங்கும் தங்குக!" சுபம்! சுபம்!!

நீங்கள் கல்வி, கேள்வி, ஒழுக்கங்களிற் சிறந்து விளங்கவேண்டுமானாலும், உலகியல் விடயங்களை உணர வேண்டுமானாலும், அரசியல் விடயங்களை அறியவேண்டுமானாலும் நம் "விவேகபாநு"வை மாதந்தோறும் இடைவிடாமல் படியுங்கள்.

வருடச் சந்தா ரூபா ஒன்று

உடனே சந்தா ரூபாய் ஒன்றும் அனுப்பி நீங்கள் சந்தாகாரர்களாகச் சேர்வதுடன், தங்களது நண்பர்களையும் சந்தாதாரராகச் சேரும்படிச் செய்யவும்.

ஓவியமும் தமிழரும்

பூனேமேடு, தமிழ்ப்பண்டிதர்,

திருவாளர் மூ. வே, மா. உலக ஊழியர் எழுதுவது

* ஓவியம் என்னும் சொல் பண்டைத் தமிழ்மொழி. ஓவியம், ஓவம், ஓவு என்பன ஒரு பொருட் கிளவிகள். இவ்வோவியம் என்னும் சொல் பலவகை வண்ணங்களாலும், வட்டம் கோணம் முதலிய வடிவங்களாலும் அழகுபெற அமைக்கும் உருவத்தைக் குறிக்கும். இதனைக் கைத்தொழில் என்று கூறும்; கையால் என்று எழுதப்படும் தொழிலாதலின், அது பொருந்தாது; என்னை கையினுல் எழுதுதல் மாத்திரை அமையாமல் பலகலையும், பல கணக்கும் அறிதல் வேண்டுமாதலானும், அவை அறிந்தோன் எழுதிய ஓவியங்களே பாராட்டப் படுகின்றன. ஆதலானும், மறியார் எழுதிய ஓவியங்கள் அஃதின்மையானும் என்க. எனவே, ஓவியம் கல்வி என்னும் துறையினும் அடங்குமாறு அறிக! ஓவியம் கல்வி, கைத்தொழில் என்னும் இரு துறைகளில் ஒருவாறு அடங்குமேனும் அவை இரண்டும் ஓவியத்தில் அடங்கும் என்று துணிந்து கூறலாம். பின்னர்க் கூறியதனுல் ஓவியத்தை கிலைக்களனுகவும், அவை இரண்டினையும் அதனிடத்துவதியும் பொருள்களாகவும் கூறலாகும். அவற்றை விளக்குதும்.

கல்வி இருவகைத்து. ஒன்று எண். ஒன்று எழுத்து. கல்வியை எத்துணை வகையாகப் பிரிக்கினும் அவ்வாறு பிரிக்கப்பட்ட அவையெல்லாம் இவை இரண்டினுள்ளே அடங்கும் என்பது எல்லார்க்கும் ஒப்ப முடிந்ததொன்று. அதனன் அன்றே "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்னும் முதியாள் மொழியும், "எண் என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண் என்ப வாழும் உயிர்க்கு" என்னும் பெரியான் மொழியும் எழுந்தன.

இவ்வாறு இரண்டாய் வகைப்படுத்தப்பட்ட கல்வி ஓவியச் சுவரில் எழுதிய ஓவியமாக நின்று நிலவுகின்றது. எவ்வாறெனில் வகைப்பட்ட

---

* கிழி முதலிய ஆகுபெயராய் ஓவியத்தை உணர்த்தும்,

அவை இரண்டும் வரிவடிவில் எழுத்துக்களுள்ளும் அவ்வெழுத்துக்களால் ஆகிய சொற்களுள்ளும், சீற்றுக்களுள்ளும் அடங்க அவை ஓவியங்களுள் அடங்குகின்றன. ஆதலான், என்பது. பரிபாடலுள் எழுத்து நிலை மண்டபம்'' சொற்றொடருக்குப் பரிமேல் அழகர் சித்திரமண்டபம் என்று பொருள் கூறியிருத்தலும் இதனை வலியுறுத்துதல் அறிக.

எண்ணும், எழுத்தும் தாம் வரிவடிவம் பெறாத மிக்க பழங்காலத்து உள்ளத்தின் தொழிலாகிய எண்ணத்திலும், உறுப்பின் தொழிலாகிய மெய்ப்பாட்டுக் குறியினும், வாயின் தொழிலாகிய மொழியிலும் நிகழ்ந்தனவே! ஆதலின்; அவை நிலை இபகளாக அது ஆதல் எவ்வாற்றான் இயையுமெனின்! கன்று சொன்னாற் எண்ணும், எழுத்தும் என்னும் அவ்விரண்டும் முறையே பண்பிலும், தொழிற் பண்பிலும்அடங்குகின்றன. ஐம்பொறி உதவியால் அறியும் காட்சி அளவானும், அக்காட்சியானவையின் துணைகொண்டு அறியும் கருத்தளவையாலும், பிற அளவைகளினாலும் காணப்படும் பொருளிடத்து உள்ள, இயத்தையாய் தான் இருத்தற்கு இடமாகிய ஒரு பொருள் இருப்பினும் தான் இறவாது மற்றைப் பொருள்களிற் கலந்து நிற்பதாய் ஐம்பொறிகாட்சிக்கு அப்பாற்பட்டதாய் உனக்காட்சிக்கெளிதாய் இருப்பது எண். இவ்வாற்றான் என் பண்பினுள் அடங்குதலை அறிக.

எழுத்துத்தொழிற் பண்பென்பது வெளிப்படை. பொருள் இன்றேல் பண்பும் தொழிலும் இல. பொருள் உண்டேல் பண்பும், தொழிலும் உள. பொருளின் சாயலே ஓவியம். பொருளைக் கண்டவிடத்து அப்பொருளின் சாயலாகிய ஓவிய உருவம் அகத்தில் தோன்றுதலானும், ஓவியத்தை கண்டவிடத்து அவ்வோவியத்தால் உணர்த்தப்படும் பொருளின் உருவமும், பொருளும் அகத்தில் உலாவுவதானும், பொருளும், ஓவியமும் வேற்றுமை நயத்தான் வேறெனத் தோன்றினும் ஒற்றுமை நயத்தான் ஒன்றே ஆகலின், எண் காணப்படுதற்கும், கல்வி தோன்றுதற்கும் இடமாகிய பொருளுக்குக் கூறிய இலக்கணங்களை மாட்டேற்றுதல் என்னும் நூற் புணர்ப்பினால் அப்பொருளொடு வேறல்லாத ஓவியத்திற்குக் கூட்டுக. அவ்வாறு கூட்ட அத்தகைய பழங்காலத்தும் ஓவியக்கடலுள்ளே எண்ணும், எழுத்தும் என்னும் முற்றும், மணியும் மறைந்து கிடந்தன என்பது தெற்றென விளங்குதலை அறிக.

இனி, ஓவியம் கைத்தொழில் எல்லாவற்றிற்கும் தாயாகும். எவ்வாறெனில் அறையுதும், கைத்தொழில் சிற்பத் தொழில், நூற்றற்

தொழில், நெய்தற்றொழில், தச்சுத்தொழில், கர்மத்தொழில் முதலியவாய் மிகப்பலவாம். இத்தொழில்கள் புரிதற்கு உரிய கருவிகள் எல்லாவற்றையும் ஈன்றது ஓவியமே. ஆதலால் ஓவியத்தாய்க்கு இவைகள் பிள்ளைகளானவாறு காண்க. மிகச் சிறந்த சிற்பம் ஓவியத்தின் திரிபென்றே கூறலாம். ஏனை ஒவ்வொரு தொழிலும் ஓவிய அடிப்படையின் மேல் எழுந்த மாளிகைகளாகும். சிற்பத்தொழில் புரிவோர்க்கு ஓவிய அறிவு வேண்டியதில்லை.

ஆதலின் எல்லாத் தொழில்கட்கும் ஓவியத்தொழில் தாயாவது யாண்டை எனின்? அறியாது கூறினாய், ஓவியம் கண்ணால் பார்க்கப்பட்டுக் கையால் எழுதப்படுவதுமாத்திரமன்று. கண்ணால் பார்த்ததோர் பொருளை மனத்தால் பலமுறை நினைத்து உள்ளத்தில் அமைத்துப் பின்னர் வெளிப்படுத்தப்படும் ஓவியமும், செவியால் கேட்டு உள்ளத்தில் அமைத்துப் பின்னர் உருவாக்கப்படும் ஓவியமும், உள்ளத்தால் உள்ளிப் பின்னர் உரைக்கும் ஓவியமும் எனப் பலவகைபடும். ஆதலால் அமையும் என்பது.

மரங்கொல் தச்சன் ஒருவன் ஓவியம் எழுதத்தெரியாதவனாயினும் ஒரு பொருளின் அமைப்பைப்பார்த்து அதுபோல் மரத்தாயி உருவம் செய்கின்றான்; கருங்கைக்கொல்லன் ஒருவன் ஓவியம் எழுதல் அறியானாயினும் ஒரு பொருளைப் பார்த்து இரும்பை முரித்துக் கொன்று தான் பார்த்த பொருள் போன்றதோர் உருவத்தைச் செய்கின்றான். பணிக்காரனொருவன் இம்முறையில் அமைத்துத் தரல்வேண்டுமென்று கூற நன்கலந்தருங் கம்மியன் ஒருவன் அவன் கூறியாங்குப் பொன்னும், மணியும், முத்தும் கொண்டு நன்கலஞ் செய்கின்றான். புலவன் ஒருவன் தன் புலமை மிகுதியால் உள்ளத்தால் உள்ளி உள்ளிக் கவியாகிய ஓவியத்தைச் செய்கின்றான். இவ்வாற்றான் ஒவ்வொரு தொழிற்றுறையில் அமரும் ஒவ்வொருவரும் ஓவியப்புலவரானமையறிக. இவர்களுட் பாவலன் கைத்தொழிலாளி அல்லனேனும் ஓவியப் புலவனாகக் கருதப்படுகின்றானாதலின் ஈண்டெடுத்துக் கூறினாம்.

“இடிகொள் வேழத்தை எயிற்றுடன் எடுத்துடன் விழுங்கும்
கடிய மாசுணம் கற்றறிந் தவரென வடங்கிச்
சடைகொள் சென்னியர் தாழ்விலர் தாமிதித்; தேறப்
படிகள் தாமெனத் தாழ்வரை கிடப்பன பாராய்.”

இச் செய்யுளை ஏன் ஓவியம் என்று கூறலாகாது. இச்செய்யுளை யொத்த கம்பனை ஓவியப் புலவன் என்று ஏன் கூறுதல் ஒன்ருது. இதனை நாம் படிக்கும் போது இடியும், அதன் முழக்கமும்; யானையும் அதன் பிளிறலும், மலைப்பாம்பும். அப்பாம்பு யானையை ஒருசேரத் தங்குதடையின்றி விழுங்கலும், அப்பாம்பின் கொடுமையும்; நூல்களும், நூல்களைக் கற்றறிந்த புலவரும் அவரடக்கமும்;துறவுப்பெரியாரும் அவரது நோன்பிளுற்றலும், அப்பெரியாரிடத்து அன்பு பூண்டு கிடக்கும் பாம்பின் அடக்கப்பணியும், அப்பெரியாரின் செலவும், அவர் செல்லும் படிகளும், மலையும், பக்கமலையும், சீதையும் இவற்றை யெல்லாம் அவட்கு இராமன் காட்டுமாறும் நம்முளத் தகத்தும், நங்கண் முன்னும் நிற்கின்றனவலவோ? இங்கு காட்டியவற்றுள் சுருதலளவையால் உணர்தற்பாலவாய அடக்கம் முதலியவும் இச்செய்யுட் படத்தில் விளங்குகின்றவாறு கண்டுமகிழ்க. இவ்வளவையும் சுருங்கிய நாலடியளவுள்ள ஒரு நெடிலடிக்கிழியில் அமைத்துக்காட்டும் இவ்வோவியப் புலவனின் மாட்சி என்னே! என்னே!!

"உபிராவணம் இருந்து உற்று நோக்கி, உள்ளக் கிழியின் உரு எழுதி உயிர் ஆவணம் செய்திட்டு உன்கைத் தந்தால் உணரப்படுவாரோடு ஒட்டி வாழ்தி"

இச்செய்யுளைத் தமிழ்நாடு செய்த நோன்பினல் தமிழ் மொழியில் அருளிய பெரியார், உருவம் எழுதுங்கால் எழுதுவோனும், கருவியும் எழுதப்படும் பொருட்கிடமாகிய இடமும் அசைந்தால் ஓவியம் அழகு கெடும் ஆதலின் உயிராமல் இருந்து எழுதக் கூறி யாணையிட்டிருக்கின்றனர். அது நிற்க அது பின்னர் கூறுதும். இவ்வடிகள் தம்முள்ளத்தில் கடவுள் வடிவினையும் அசைவின்றி எழுதியமை பெறப்படுகின்றதன்றோ? இத்தகைய பெரியாரும் ஓவியப் புலவர் என்று தம்மை ஒத்துக்கொள்ளுவராயின் ஓவியப் புலவருள் ஏனையோரை அடக்குதல் குற்றமாக ஆகவுங் கூடுமோ என்னும் ஐயம் தோன்றுகின்றவாற்றை அறிஞர் அறிக.

இனி, யாண்டாண்டு அழகு காணப்படுகின்றதோ ஆண்டாண்டெல்லாம் ஓவியம் உண்டென்று அறிக. இதுவரை, ஒவ்வொரு தொழிலினும் ஓவியத் தொழில் கலந்து நிற்கின்றதென்று கூறினும். இனி, ஓவியத்தின் இயற்கைப் பெருமையினைப்பற்றிச் சில கூறுவாம்.

ஓவியம் பார்ப்பவரின் கண்ணையும், கருத்தையும் கவருகின்றது; அவ்வழியே அவர்களுடைய உள்ளத்தில் உவகை அரும்புவிக்கின்றது,

அதனால் அவர்கட்கு அது இன்பத்தை அளிக்கின்றது. இன்ப ஆக்கத்தால் துன்ப நீக்கம் அளிக்கின்றது. ஓவியத்தை உற்று நோக்கிப் பழகி வந்தால் உள்ளத்தை ஒருவழிப் படுத்தல் கைகூடும் என்று பெரும் புலமை சான்ற **மறைமலையடிகள்** முதலிய புலவர் பெருமக்கள் கூறுவவராயின் ஓவியத்தின் நெருமையை எவ்வாறு எடுத்துரைத்தல் ஒல்லும். எடுத்துரைக்க முடியாதென்பதை ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமிலாக் கடவுட்கு ஓராயிரம் திருவுருவம் எழுதியும், அமைத்தும், வார்த்தும், தமிழர் வழுபடுதலால் அறிக. என்னை? கடவுளது பெருமையை உரைக்க முடியாவாறு போல அக்கடவுளின் அருட்டிருவுருவினை விளக்கும் ஓவியத்தின் பெருமையையும் எடுத்துரைத்தல் முடியாதாகலான் என்பது உரையாலும், உளத்தாலும், உணர்வாலும் பற்றப்படாத கடவுளையும் ஓவியத்தில் அமைக்குமிடத்து 'அவ்வோவியத்தின் பெருமை பெரிதே! பெரிதே! பல்லாயிர நாழிகைத் தொலைவிலுள்ள நாடுகளையும், மலைகளையும், கடல்களையும், நகரங்களையும், ஊர்களையும், மக்களையும், ஏனை உயிருடைப் பொருள்களையும் ஓரிடத்தில் இருந்து கொண்டு எளிதில் உணர்வது ஓவியத்தினாலே என்றால் ஓவியம் எத்துணைச் சிறப்புடையது!

இனி, இவ்வோவியத்தை வரையும் புலவன் எத்தகையன் என்பதனை ஆராய்வாம். சிறந்ததோர் ஓவியத்தைக் கண்டவிடத்து இவ்வோவியத்தைச் செய்தவன் எம் மகன் 'கொல்லோ' என்று வியப்புடன் அவனைக்காண நம் மனம் விழைகின்றது. இவனால் ஓவியப் பெருமை எல்லாம் ஓவியப் புலவன் பெருமையாகவே கொள்ளப்படுதல் அறிக. ஒரு முழுவினை ஓவியன் வரைய வேண்டுமாயின் அம்முழுவின் அளவினையும், அமைப்பினையும், நிறங்களினையும், வார்க்கட்டினையும், அவன் கூர்ந்து அறிந்திருந்தால் அன்றி எவ்வாறு அதனை அவன் வரைதல் இயலும். ஒரு மரத்தினை ஒருவன் எழுதவேண்டின் அதன் கிளைகள், இலைகள், பூக்கள், காய்கள் முதலியவற்றை அவன் எவ்வளவு நுணிகி அறிதல் வேண்டும். மக்கட்குக் கூறிய உறுப்புகள் உடையராக இருப்பினும் தாம் வாழுமிடங்களின் தட்ப, வெட்பங்களால் பெரிதும் மாறுபாடுடையராய் வதியும் மக்களை உருவத்தில் அமைக்குங்காலும் அவன் எவ்வளவு உற்றுணரும் ஆற்றல் உடையனாய் இருத்தல் வேண்டும்.

எனவே, ஒவ்வொரு பொருளையும் தனித்தனி அறிந்து அப்பொருளை முன்னர் உள்ளத்தில் எழுதிப் பின்னர்க் கையினால் எழுதும் ஆற்றல் வாய்ந்தவனாகின்றான், எனவே அவன் நுண்ணுடலும், பருவுடலும் ஒற்றுமையுடையனவாய் ஒருவழி யொழுகுகின்றன. ஒரு பொரு

ளின் உறுப்பியல்பினை நூற்புலவன் ஒருவன் வாயினால் உரைத்துணர்த்துகின்றான். ஓவியப் புலவன் ஒரு பொருளின் உறுப்பியல்பினைக் கையினால் எழுதி உணர்த்துகின்றான். நூற்புலவன் கேட்பவர்க்கு உணர்த்துகின்றான். ஓவியப் புலவன் கேட்பவர்க்கு உணர்த்துகின்றான். நூற் புலவனுக்கும் ஓவியப்புலவனுக்கும் இவ்வளவே வேறுபாடு. உணர்த்தும் முறையில் நூற்புலவனுக்கும் ஓவியப் புலவனுக்கும் ஒற்றுமை யிருத்தல் உணர்க,

ஓவியப் புலவன் ஒவ்வொரு பொருளின் உடலமைப்பையும் நிற முதலியவற்றையும் அறிந்திருத்தலேயன்றி மாநிலவளாக அறிவும், வரலாற்று அறிவும் வாய்க்கப் பெற்றவனாய் இருத்தல் வேண்டும். ஒவ்வொருநாட்டுப் பொருள்களையும் வரையவேண்டியவனா யிருத்தலின் அவனால் மாநிலவளாக அறிவு இன்றியமையாமல் வேண்டப்படுவ தொன்றே எனினும் வரலாற்று அறிவு வேண்டிய தென்றால் பிறவெனின், அற்றன்று. என்னை? ஏனை உயிரில் பொருளையும், உயிருடைப்பொருளையும் போலானாய் மனிதன் நாளும், நாளும் அறிவு வளரப்பெற்று வருகின்றாதலின் அறிவின் குறைவுக்கும், வளர்ச்சிக்கும் ஏற்ப அவன் ஒழுக்கங்களும், உடலமைப்பும் பிறவும் மாறுபடுகின்றன. ஆதலின் அறிதல் வேண்டும் என்பது. இத்துணை அறிவுடைமை வாய்க்கப் பெறவேயன்றி ஒவ்வொரு உயிர்ப் பொருளின் எண்ண அலைகளையும் தான் அறிந்திருத்தல் வேண்டும். இவ்வாறு அறியும் மதுகை இலரானமை யான் அன்றே இக்காலத்து ஓவியர் சிலர் ஓடாப் பொன்னையும், ஓட்டையும் ஒப்ப நோக்கும் பெரியாராகிய திருநாவுக்கரசு நாயனார்க்குப் பொற்கலங்கள் அணிவிக்கின்றனர். பொன்னைத் துறந்த பெரியார்க்குப் பொற்பணிகளை வலிந்துபூட்டி ஒழுதப்பட்ட 'அவ்வுருவத்தில் தெய்வத் தன்மை யாண்டிருக்கும்.

" இடையறாப் பேரன்பும் மழைவாரும் இணைவிழியும் உழவாரத் திண்
படையறாத் திருக்கரமும் சிவபெருமான் திருவடிக்கே பதித்தநெஞ்சும்
நடையறாப் பெருந்துறவும் வாகீசப் பெருந்தகைதன் ஞானபாடல்
தொடையறாச் செவ்வாயும் சிவவேடப் பொலிவழகும் துதித்துவாழ்வாம்"

இச்செய்யுட்கிழியில் அப்பெரியார் திருவுருவமும், திருவருளும் விளங்குகின்றனவா? அப்பொருந்தா ஓவியத்தில் அவை விளங்குகின்றனவா? அந்தோ! அந்தோ! இன்னார் நந்தமிழ் நாட்டுத் திருநெறிப்பெரியாரை வாயினால் வைதுபேசும் மாக்களினும், தாள்களிற் பிதற்றும்தண்ணியரினும் தமிழ் நாட்டுக்குத் தீங்கிழைக்கின்றனர். என்னை?

தொடரும். (தமிழ்ப்பொழில்)

—

சென்னை நகர் கந்தகோட்டத்தில் எழுந்தருளிய

கந்தசுவாமி இரட்டைமணிமாலை

சென்னை தொண்டை மண்டலம் துளுவவேளாளர் கலாசாலை

தமிழ்க்கழக கௌரவ காரியதரிசி

வ. ஏகாம்பரன் எழுதியது

காப்பு

நேரிசை - வெண்பா

ஏராரும் சென்னைநகர் ஏய்ந்தவெங்கள் கந்தன்மேல்
சீராரும் செந்தமிழில் சீர்த்தூக்கால்—பேரார்
இரட்டைமணி மாலை இயம்புதற்கு நாளுங்
கரக்களிற்று மாமுகத்தான் காப்பு.

நூல்

நேரிசை - வெண்பா

1 விண்ணவரும் வந்துபுக வேட்கையுறும் சென்னைநகர்த்
தண்டலத்தே மேவுகந்தன் தாளிணையை—கொண்டசிர
ஆதரர்க்கு வேட்டபொரு ளத்தனையும் நன்னெறியில்
ஏதமற ஈவான் இசைந்து.

கலித்துறை

2 இசையே மிகுந்த எழிற்றிரு ஞான மிசைக்குமரா
வசையே மிகுந்த அவுணரை வாட்டிய வல்லவனே
பசையே மிகுந்த அடியாரை காத்திடப் பச்சைமயில்
மிசையே றிவந்துயர் சென்னையில் மேவிய வேலையனே.

நேரிசை – வெண்பா

3 வேலைசூழ் மண்ணிலிடர் வேலைக்குள் ளாக்காதே
மாலைவண்ண மாய்விளங்கும் மாமுருகா—மாலைக்
கடம்பணிந்த மார்பனே காத்தருள்வாய் சென்னை
யிடங்கொண்ட. வேளே யினி.

கலித்துறை

4 இனியா ரெனக்கே இனியா ரிழைக்கும் பிழைபொறுத்தே
கனியா வெனையே கனிவாய்க்கருணை கொடுப்பாய்
குனியா வவுணர் குனியச்செய் வேலவ கொங்குமலர்
மனியோங் கிடுபொழில் சூழ்சென்னை மாநகர் வாழ்பவனே.

நேரிசை - வெண்பா

5 வாழ்வுதரு மீசருக்கு மாண்புற வோங்காரத்தின்
தாழ்வில்லா நற்பொருளைத் தானுரைத்தோய்—ஊழ்வலியை
மாற்றுகின்ற மாண்புடையாய் மைந்தனுரைத் தற்காமோ
தேற்றமிகு நின்னுடைய சீர்.

கலித்துறை

6 சீர்கொண்ட சென்னைத் திருத்தல மேவிய தேசிகனே
நேர்கொண்ட சென்னி நிலனுறத் தேவர்நிதந் துதிக்கும்
தார்கொண்ட மார்ப தனிவேற் கரங்கொண்ட சண்முகனே
நீர்கொண்ட பூவி லரிதாநின் னாற்றல் நினைப்பதற்கே.

நேரிசை - வெண்பா

7 நினையார் நினையார் நிலவும் பொழில்சேர்
சென்னைமா நகரமரும் சேயே—தினைப்புலத்து
வள்ளியைநீ நாடி வதுவைசெய்த நீர்மைதனை
உள்ளிடுவார் கொள்வார் உயர்வு.

கலித்துறை

8 உயர்வில் அவுணர்களைச் செகுத்தும்பருக் குற்றபெருந்
துயரற நீக்கிக் கருணைமிகச் செய்த தூயவனே
தயவா ருளமுடை யாய்சென்னை மேவிய சண்முகனே
உயவே நினையணிந் தேனென்று தி மனத்தோர்குவையே.

நேரிசை - வெண்பா

9 ஓர்ந்தக்கால் தீவினைகள் ஓடிவிடும் நன்மையுறும்
தேர்ந்துமறை யோதியிடும் தேசிகனே—ஆர்ந்தபொருள்
சென்னைவளர் கந்தாநின் சேவடியைச் சேர்ந்தார்க்குப்
பின்னை இலையாம் பிறப்பு.

கலித்துறை

10 பிறங்கு மகத்திய னார்க்குத் தமிழைப் பெருமையுடன்
அறங்கு லவத்திரு வுள்ளங் கொண்டோதிய அற்புதனே
கறங்கு முரசதிர் சென்னையில் மேவிய கந்தப்பனே
இறங்கு மிடர் தவிர்த் தென்றனைக் காக்க விசைந்தருளே.

நேரிசை — வெண்பா

11 அருகணைந்து நின்பேர் அறைந்தநறும் மாதுக்
கருள்புரிந்து காத்தஅயி லோனே—திருமருவு
சென்னைநகர் மேவுகின்ற சேவலனே நீதருவாய்
தென்னூரு கின்ற திரு.

கலித்துறை

12 திருந்தா வவுணரை வாட்டிய சேவல தீயருள்ளம்
பொருந்தா தசேவடிப் போதுடை யாய்முன் புரந்தரனை
வருந்தா திருக்கும் வகைபுரிந்தாய் நன்மகிழ்ச்சி யென்றுந்
தருந்தெய்வமே சென்னை மேவி யிருக்குந் தலைமையனே.

நேரிசை - வெண்பா

13 தலையாய சென்னைநகர் சார்ந்திருக்கும் கந்தா
கலைகளெல்லாம் ஓது கவிஞர்—தலைவணங்குஞ்
சன்னிதிகொள் சண்முகனே நல்வரந்தா
பொன்னடியைப் போற்றப் புகழ்ந்து.

கலித்துறை

14 புகழ்ந்தோங் கடியவர் போற்றிடு சென்னை புரிக்கரசே
திகழ்ந்தோங்கு செய்யவனே மயில்மேல்வரு தேசிகனே
நெகிழ்ந்தோங்கு மன்புறு நெஞ்சுளகுஞ்சரி நித்தலுமே
மகிழ்ந்தோங்கி டச்செய்யும் பேரழகாவள்ளி மானின் மன்றே.

நேரிசை - வெண்பா

15 மன்னவனே ஆறு முகத்தவனே மாசோதி
யன்னவனே சென்னை யமர்ந்தோனே—நின்மலனே
சிங்கமுகன் யானைமுகன் செப்புமிரு பேர்களையும்
சங்காரஞ் செய்தோய் தனித்து.

கலித்துறை

16 தனித்த பரம்பொரு ளேயருள் மாரிதருமுகிலே
இனித்த சுவையமு தேயெழிற் சென்னையெழு கந்தனே
சனித்த பிறவிப்பயன் கொள்ள நீயருள் தந்திடுவாய்
இனித்த லமீது பிறவா வரமு மெனக்களியே.

நேரிசை – வெண்பா

17 அளியாடுஞ் சோலை யடர்ந்த சென்னை மேவும்
அளியார் முருகாவென் ஐயா—எளியேனைச்
சேர்ப்பாய்நின் பொன்னடியில் தீமையகலக் கடைக்கண்
பார்ப்பாய்விட் டோடும் பணி.

கலித்துறை

18 பனிதரு மாமலர்ச் சோலைகள் சூழ்ந்து பசுமை திகழ்
இனிதருஞ் சென்னைநற் கந்தாயெந் நாளுமிசைந்துவந்து
மனிதருந் தேவரும் மாமுனிவோர்களு மற்றுமுள்ள
புனிதரும் போற்று கழலா யென்சிந்தை பொருந்துகவே.

நேரிசை - வெண்பா

19 பொருந்துறு தீநெறி பொன்றிட நின்றுட்
கருந்துதிகள் பாடி யடுத்தேன்—திருந்துமெழிற்
சென்னைநகர்க் கந்தாநீ தீமையனைத்துந் தீர்த்து
என்னையுவந் தேகாப்பாய் இன்று.

கலித்துறை

20 இன்று தயவுசெய் யென்றே பணிந்தனன் ஏழையென்மேல்
என்று திருவருள் நீசெய்குவாய் சென்னையெய்து கந்தா
குன்றினில் மேவிக் குறக்குலக் கன்னியைக் கொண்டுமுன்னே
மன்றல் புரிந்த வடிவேலவா வென்னை வாழ்விப்பையே.

வித்தையிற் சிறந்த விற்பன விவேகிகாள்!

நீங்கள் "விவேகபாநு"வை ஆதரிக்கவேண்டாமா? அதற்கு என்ன செய்யவேண்டுமென்பதை நாம் சொல்லவும் வேண்டுமோ? நாம் சொல்லாமலே நீங்களே ஏன் தெரிந்து ஏற்றது செய்யக்கூடாது? இனியேனும்தெரிந்து உதவிபுரிந்து பாநுவை ஆதரிக்கவும்!

ஆலய அமைப்பு

மன ஒருமைக்குச் சிறந்தவழி

நமது முன்னோர்களால் நிறுவப்பட்டுள்ள பலசிறப்பட்ட அமைப்புக்களும் உயர்ந்த தத்துவம் கொண்டே விளங்குகின்றன. அவற்றுள் ஆலய அமைப்பும் ஒன்றாகும்.

ஆலயமானது மக்கள் வேறு சிந்தனைகளின்றி இறைவனை வழிபடுதற்காக அமைக்கப்பட்ட இடமாகும். ஏனைய இடங்களிலிருந்து செய்யும் வழிபாட்டைவிட ஆலயங்களிலிருந்து செய்யும் வழிபாடே சிறப்புடைத்தாம். எங்ஙனமெனில் கூறுதும்.

ஆலயங்களைத்தவிர ஏனைய இடங்களெல்லாம் பொருள் தேடுதற்கிசைந்த முயற்சிகளும், தேடிய பொருளை வைத்தனுபவித்தற்கிசைந்த முயற்சிகளுமே நடைபெறுதலால் அவ்விதமுயற்சிகள் நடைபெறுமிடத்திற்குச் சென்றால் அதைப்பற்றிய சிந்தனைகளே உண்டாதல் இயல்பாகும்.

உதாரணமாக பெரியார்களிடத்திற் சென்றால் அவர்களது தூய நிலைமையைப் பற்றிய சிந்தனைகளும், அங்காடிக் கடைப்பக்கம் சென்றால் அங்குள்ள சாமான்களைப் பற்றிய சிந்தனைகளும், மாம்பழக்கடைக்குச் சென்றால் அதைப்பற்றிய சிந்தனைகளும், ஒருவர் இறந்து கிடக்கும் இடத்திற்குச் சென்றால் யாக்கையின் நிலையாமையைப் பற்றிய சிந்தனைகளும் உண்டாதல்போல, இறைவன் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஆலயத்திற்குச் சென்றால் இவைகளைப்பற்றிய சிந்தனைகளும் உண்டாதல் இயல்பேயாகும். இதனால் நம்போன்றார்க்கு இறைவனை வேறுபற்றின்றி வழிபடுதற்கு ஆலயமே சிறந்த இடம் என்பது புலனாகின்றது.

நமது ஆலயங்களை உற்று நோக்குழி சிற்பத்துறையில் சித்திரக்கூடமென்றும், ஏனைய துறைகளை மன ஒருமைக்குச் சிறந்த மருந்தென்றும் கொள்ளலாம். நமது ஆலயங்களில் சிற்பத்தொழில் சிறந்து விளங்குகின்றது. ஓர் சிற்பியானவர் ஆலயத்துட் சென்றால் அவரது மனமானது அச்சிற்பத்தின்பாற் பட்டு ஒருமையடைந்துவிடும். ஓர் இன்னிசைப்பற்றுள்ளவர் ஆலயத்திற்குச் சென்றால் அவருள்ளம் அங்கு ஒலிக்கப்பெறும் இன்னிசையின்பாற்பட்டு ஒருமை யடைந்துவிடும். ஆங்கு நடைபெறும் ஒவ்வொரு தொண்டும் இவைபோல் உயர்ந்த தத்துவம்

கொண்டே விளங்குகின்றது. சுருங்கக் கூறின் மன ஒருமைக்குச் சிறந்த வழிபாடேயாகும். இதுபற்றியன்றோ நமது ஔவைப் பிராட்டியாரும் "ஆலயந் தொழுவது சாலவும் நன்று" எனத் திருவாய் மலர்ந்தருளினர். அன்பர்கள் மன ஒருமைக்கு சிறந்த சாதனமான ஆலயத்திற்குச் சென்று, ஆங்கு திருக்கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் இறைவனை மனமொழி மெய்களால் வழிபட்டு அவரது திருவடிமலரைப் போற்றிப்பணிந்து திருவருளைப்பெற்றின்புறலாம். அவ்வண்ணமே திருவருள் துணைபுரிவதாக.

சிவநேசன்.

:: விவசாயப் பகுதி ::

நிலத்தைப் பண்படுத்தல்

உலகத்தில் யாவரும் உச்சீவிக்கும் பொருட்டுக் கடவுளால் கற்பிக்கப்பட்ட பலதொழில்களிலும் உழவுத்தொழிலே சிறந்தது. ஒருவரிடத்து சேவித்துண்ணும், உணவிலும் உடையிலும் உழுது பயிரிட்டு உண்ணும் உணவே இனிய உணவாகிற தென்பது ஆராய்ந்து கண்ட அனுபவம்.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்"

இக்குறளினால் உழவின் பெருமையும், உழவையே தொழிலாகக் கொள்வோரின் சுயேச்சையும், நன்று விளக்குவது மன்றி, அத்தொழிலைக் கைவிட்டு வேறு தொழிலில் இறங்குவோரின், அடிமை வாழ்க்கையையும் ஒருவாறு விளக்குகிறது.

ஆக உழவு எத்தன்மையது என்று ஒருவாறு விளக்குகிறது. ஆக உழவு எத்தன்மையது என்று ஒருவாறு அறிந்த நாம், தற்போது எடுத்துக்கொண்ட விஷயத்தை விரிவாகக் கூறுவோம்.

"அகல உழுதலினும் ஆழ உழுதலே நன்று"

அடியிலுள்ள புழுதிகள் நன்றாக வெளிக்கிளப்பும்படி, கூரிய கலப்பைகொண்டு உழவேண்டும். மிகவும் கடினமாயிருக்குமாயின், பாரை

கொண்டு பலயிடங்களிலும் குத்திக் கோலிவிட்டு, பிறகு மண்வெட்டியால் நன்றாக வெட்டி மண்ணை ஒருபுரத்தி லிடவேண்டும். கட்டிகள் பலயிருப்பின் அவற்றை உடைத்து, மண்ணுடன் மண்ணாய் கலக்கவேண்டும். எதற்காக ஆழமாக வெட்டவோ, உழவோ வேண்டுமென்றால்; நாம் நடும் செடிகளின் அடிப்பாகத்துவேர் பூமி மட்டத்திலிருந்து கீழே எவ்வளவு சூரியனுடைய உஷ்ணத்தின் சக்தியும் குறையுமென்பதே. அப்படி சூரியனின் உஷ்ணம் அவ்வேரிலும், அதன் அடிப்பாகத்திலும் படாமலிருந்தால், அவ்வளவும் அச்செடிக்கு நல்லதே.

பிறநாட்டு எருக்களைப்பற்றி நாம் கவனிக்கவேண்டியதில்லை. நம் நாட்டில் கிடைக்கக்கூடிய முக்கிய எருக்களை கவனிப்போம். அவைகளாவன:—புது எலும்புகள், மாமிசங்கள், காய்ந்த கடல் மீன்கள், பிண்ணாக்குகள் வௌவால், குருவி, புறா போன்ற பக்ஷிகளின் புழுக்கைகள், குதிரைச சாணம், மாட்டுச்சாணம், மனிதர்களின் எச்சம் (பி) ஆட்டுப் புழுக்கைகள், மரக்கரியின் தூள்கள், வெடியுப்பு போன்ற இவைகளும் மற்றும் சிலவகை எருக்களும் கிடைக்கின்றன.

எருக்களில் எல்லாவற்றிலும் நல்ல குணங்களிருக்கிறதென்றும், உயர்வு தாழ்வு என்பதும், ஒவ்வொன்று ஒவ்வொருவகை செடிகளுக்கு உரிய எருவாகிறதென்பதும் பலரும் அறிந்த உண்மையாகும்.

உதாரணமாக ஆட்டுப்புழுக்கையை எடுத்துக்கொள்வோம். அது நல்ல எருவென்றும், அதில் காரம் அதிகமென்றும் பலரும் அறிந்திருக்கலாம். ஆனால் அதை எப்படி உபயோகித்தால், அதன் காரம் குறைவதுடன், அதன் பயனாக முன்னிலும் பன்முறை அதிகமாக பலருக்கும் பயனை அளிக்கும் என்பதை பலரும் அறிந்துகொள்வது அவசியமல்லவா?

அப்புழுக்களை ஒருங்கே சேகரிக்க வேண்டும். பிறகு தண்ணீர் நிறைந்திருக்கும் ஓர் பெரிய பாத்திரத்தில்விட்டு நன்றாக ஊரவைக்க வேண்டும்; பிறகு கட்டி என்பதே யில்லாது ஒருங்கே கரைக்கவேண்டும்; அப்படிக்கரைத்த சாணத்தை நிலத்தின் பலபாகங்களிலும் சமமாகப் படும்படி வார்ப்பார்களேயானால் ஆட்டுப் புழுக்கையின் காரம் குறைவதுடன், நிலத்திற்கு நல்ல எருவாகி அதன் பயனாய் நல்ல மாறுலையும் அளிப்பது திண்ணம். (ரோஜா செடிக்கு இம்மாதிரி செய்துப் பார்த்தால், ரோஜாவின் வளர்ச்சியிலிருந்து அதன் உண்மை முழுதும் விளங்கும்)

இதனால் பலருக்கும் ஏதேனும் பயனிருப்பதாக காணப்பட்டால் ஏற்றுக்கொள்க; இன்றேல் பதினெட்டாம் பெறுக்கென விட்டு விடுக!

(த-பி)

ஜலபானம்

ஜலமும் ஓர் ஆகார பதார்த்தமெனக் கருதப்படுவதில்லை. ஆனால், சரீரத்திற்கு ஊட்டத்தைக் கொடுக்கக்கூடிய முக்கியமான பதார்த்தங்களுள் அஃது ஒன்றாக இருக்கிறது. சரீரத்தின் பளுவிலும், பருமனிலும் ஆறில் ஐந்து பாகமானது ஜலமயமான தென்பதைத் தெரிந்துகொள்ளின், இதன் உண்மை புலப்படும். சரீரத்தின் எலும்புகளின் அமைப்பில் சேர்ந்துள்ள இதர வஸ்துக்கள் கிரெயின் அல்லது டிராம், அல்லது பவுண்டுகளாக இருந்து வருகின்றன. இவைகள் பலமடங்கு ஜலத்துடன் சேர்ந்து மனிதசரீரத்தை உருப்படுத்துகின்றன.

சரீரம் தனக்கு ஏற்பட்டுள்ள வேலைகளைச் சரியாகச் செய்து வருவதற்கு ஜலம் முக்கியமானது. இரத்தம், நிணநீர், ஜீரணரஸம் முதலிய ரஸங்கள் பெரும்பாலும் ஜலமயமாகவே இருக்கின்றன. போதிய வளவு ஜலம் சரீரத்தில் இருந்தால்தான் எல்லா உறுப்புகளுக்கும் தத்தம்வேலையைச்செய்ய முடியும். எவ்விதம் மீனானது ஜலத்திலே ஜீவித்திருக்க முடியுமோ, அவ்விதமே சரீரத்திலுள்ள தசைகளுக்கும் ஜலம் அவசியமாம்.

சரீரமானது ஆரோக்கியமாக இருந்து வருவதற்கு எவ்விதம் ஆற்றில் ஜலம் போகிறதோ அவ்விதமே எல்லாத் தசைகளின் வழியாகவும் ஜலம் சென்று அவைகளைச் சுத்தம் செய்யவேண்டும். இவ்விதம்தான் தசைகளில் விஷ சம்பந்தமான வஸ்துக்கள் சேர்ந்திராமல் அடித்துக் கொண்டு போகப்படுகின்றன. இதனால் தான் அவைகளுடைய சக்தி பாதுகாக்கப்படுகிறது.

உஷ்ண தேசத்தில் வசிக்கும் ஒவ்வொருவரும் பகலில் ஆகார வேளைகளுக் கிடையில் எட்டுக்கோப்பை ஜலமாவது குடிக்கவேண்டும். சூப்புகள், பழரஸங்கள் பால், ஜலப்பிராயமான மரக்கறிகள் இவைகளைச் சேர்த்துக்கொள்ளுவதும் இந்த அளவை இட்டு நிறப்புவதற்கு உபயோகமாக இருக்கின்றன.

ஆனால், சில விஷயங்களில் முன் ஜாக்கிரதையாக இருந்துவர வேண்டும், ஒரே காலத்தில் அதிக அளவு ஜலத்தைக் குடித்துவிடக் கூடாது. குடிக்கும் ஜலமானது அதிக உஷ்ணமாகவாவது, அதிகக்

குளிர்ச்சியாகவாவது இருக்கக்கூடாது. ஆகார வேளைகளில் அதிகஜலத்தைக் குடிப்பதால் ஆகார பதார்த்தங்கள் ஜீரணமாகாமலே சரீரத்திற்குள் போய்ச் சேர்ந்துவிடக் கூடுமாகையால், அந்த வேளைகளில் அதிக ஜலத்தைக் குடிக்கக் கூடாது. ஆகார வேளையில் உறிஞ்சிக் குடிப்பதற்கு ஒரு கோப்பை ஜலம் போதுமானது. குறைவாக ஜலத்தை சேர்த்துக்கொண்டு வந்தால் மனிதர்களுடைய சரீரத்திலுள்ள சாக்கடை அடைத்துக்கொண்டு சரீரத்தில் விஷம் ஊறுவதற்கு இடமேற்படும்.

(ஆ-தீ.)

:: செய்தித் திரட்டு ::

நாயின் அறிவு

ஹாலந் தேசத்தில் ஓர் ஆசிரியர் நாய்க்குட்டி ஒன்றை அருமையாக வளர்த்து வந்தார். இதை யாரோ திருடிக்கொண்டுபோய் விட்டார்கள். நாய் சில நாளைக்கெல்லாம் அவர்களிடமிருந்து தப்பித்துக்கொண்டு நாட்டுப் புறத்தின் வழியாக வந்தபோது சோர்ந்து விழுந்துவிடவே, அங்கே டாக்டர் அதை அழைத்துச் சென்று அன்புடன்வளர்த்து வந்தார். ஒருநாள் அவருடைய ஆகாயவசனி (ரேடியோ) இயந்திரத்தின் மூலம் பிரசங்கம் ஒன்று கேட்டுக்கொண்டிருந்த காலையில் நாய் அந்தக் குரலைக்கேட்டு மிகவும் பரபரப்பும் மகிழ்ச்சியும் தெரிவித்ததை அவர் கண்டார். உடனே அவர் மேற்படி பிரசங்கம் செய்தவருடன் கடிதப்போக்கு வரவு செய்ததில், நாய் அவருக்குச் சொந்தமானதென்று தெரிந்து அவரிடம் சேர்ப்பித்தார்.

* * * *

பசுவின் தயாளம்

ஆஸ்திரேலியாவிலுள்ள நியூஸௌத்வேல்ஸ் மாகாணத்தில் இருபுறமும் இயற்கை வனப்பு மிகுந்த ஒரு சாலை இருக்கிறது. அந்தச் சாலையில் ஒரு நாள் இரண்டு ஸ்திரீகள் மோட்டார் செலுத்திக்கொண்டு போகும்போது தூரத்தில் இரண்டு சிறு உருவங்கள் நிழல்போல் அசைகின்றதையும், அந்த உருவங்களைப் பக்கத்து வயலிலிருந்து வந்த ஒரு பசு நடுப்பாதையினின்றும் அப்பால் முட்டித் தள்ளியதையும் கண்டார்கள். சமீபத்தில் வந்தபோது தள்ளப்பட்ட உருவங்கள் இரு சருப்பு நாய்க் குட்டிகளே என்று தெரியவந்தது. வண்டிகள் செல்லும் நடுப்பாதையில் அவை விளையாடிக்கொண்டிருந்ததைக் கண்ணுற்ற அந்த அறிவுள்ள பசு தயாளங்கொண்டு அவைகளை வண்டியிலகப்பட்டுக்கொள்ளா

மல பாதையினின்றும் அப்புறப்படுத்தியதாக அறிந்து அவர்கள்கொண்ட அதிசயத்துக்கு அளவில்லை.

* * * *

நீந்தத் தெரியாத மிருகம்

மிருகங்களுக்குள் ஒட்டகை ஒன்றுக்குத்தான் நீந்தத் தெரியாது. இது வெள்ளத்தில் அகப்பட்டுக்கொண்டால் தப்புவதற்கு எவ்வித முயற்சியும் செய்யாமல் மல்லாந்து விடுமாம்.

* * * *

நிறம் மாறும் பூ

மெக்ஸிகோ நாட்டில் பச்சையோந்தியைப்போல் நிறம் மாறும் பூ ஒன்று இருக்கிறதாம். இது காலையில் வெண்மையாயும், மத்தியானத்தில் சிவப்பாயும், இரவில் நீலமாயும் காணப்படுமாம்- உச்சிவேளையில் தான் இம்மலர் நல்ல வாசனை யளிக்குமாம்.

* * *

சரியான கடிகாரம்

நேரத்தைச் சிறிதும் பிழையின்றிக் காட்டக்கூடிய கடிகாரங்கள் உலகிலேயே கிரீன்விச் நட்சத்திர மண்டபத்திலுள்ள இரண்டு கடிகாரங்கள் தானும். 30-விநாடிக் கொரு முறை இவற்றில் நேரம் சரிபார்க்கப்படுகிறதாம். இந்தக் கடிகாரங்களை ஆதாரமாகக்கொண்டே உலகெங்கும் நேரம் நிர்ணயிக்கப்படுகிறது.

டெலிபோன்

லண்டனுக்கு வந்திருந்த அமெரிக்க வியாபாரி ஒருவர் சமீபத்தில் லண்டனிலிருந்து நியூயார்க்கிலுள்ள தம் கூட்டாளியுடன் டெலிபோன் மூலம் 95-நிமிஷ நேரம் பேசினராம். இதற்கு 285-பவுன் டெலிபோன் கூலி கொடுக்கவேண்டி யிருந்ததாம்.

வினா?

அறிவின்மிக்க அன்பர்களே!

1. திசை
2. தூதன்
3. மனம்
4. பாட்டு
5. தியானம்

இவ்வைந்து பதங்களின் மூலகாரண பொருள் தமிழ் மாதாந்தரப் பத்திரிகைகளில் ஒன்றன் பெயராய் வரவேண்டும்.

இதற்குச்சரியான விடைவருவதைஎற்று அவர்களின் பெயரைப் பத்திரிகையில் வெளி யிடப்பெறும்.

P. இரங்கசாமி நாயுடு,
தமிழ் வித்துவான், அந்தியூர், உடுமலைப்பேட்டை.

கடிதம்

ஆசிரியர் "விவேகபாநு" சௌகார்பேட்டை, சென்னை.

அன்புள்ள ஐயா!

சென்னையம் பதியினின்றும் தங்களால் வெளியிடப்பெறும் "விவேகபாநு" வெனும் தமிழ் மாத சஞ்சிகைகள் கிடைக்கப்பெற்றோம். அந்த சஞ்சிகைகளில் ஆராய்ச்சி, சீர்திருத்தம் ,கதை, மாதர் முதலிய பகுதிகளும், ஜீவகாருண்ய சம்பந்தமான வியாசங்கள்; சிந்துகள் முதலியன பாமரர் முதல் படிப்பாளர் ஈராய் யாவரும் எளிதில் உணரும்படி வெளியிடுவது போற்றத்தக்கது.

தமிழ் மக்கள் முன்னேற்றம் கருதி வெளிவரும் நம் "பாநு"வும், தரங்களும் நீடு வாழ்ந்து, நாடு நலம் பெற உழைக்க, எல்லாம்வல்ல இறைவனை [illegible]க்துகின்றோம்.

காரைக்குடி
6-11-28.

காரியதரிசி,
காரைச் சிவனடியார் திருக்கூட்டம்.

வியாபாரிகளுக்கோர் விண்ணப்பம்!

தக்கசமயம்! மிக்கலாபம்!!

விளம்பரஞ்செய்ய நல்ல தருணம்!

இந்தியா, பர்மா, சிலோன், பினங்கு, சிங்கப்பூர், மலாய் நாடுகள், தென்னாப்பிரிக்கா முதலிய விடங்களில் ஏராளமாய் இச்சஞ்சிகையுலாவ ஆங்காங்கும் ஏஜண்டுகளை வைத்து இச்சஞ்சிகையை நடத்துவதால், வியாபாரிகள் இதில் விளம்பரஞ் செய்து மிக்க லாபத்தை அடைவார்களாக. வியாபாரத்தில் ஊக்கமுள்ளவர்கள் தங்கள் விளம்பரங்களை நமக்கனுப்பி, பிரசுரிக்கச் செய்வீர்களென நம்புகிறோம்.

விளம்பர விகிதம்

மாதம் 1-க்கு ஒரு பக்கத்திற்கு	ரூபா	8	0	0
,, அரைப்பக்கத்திற்கு	ரூபா	5	0	0
,, கால்பக்கத்திற்கு	ரூபா	3	0	0

எப்போதும் விளம்பரத் தொகையை முன்பணமாகவே கட்டவேண்டும். நீண்டகாலம் விளம்பரஞ் செய்பவர்களுக்குச் சகாயஞ் செய்யப்படும்.

மானேஜர்—"விவேகபாநு" ஆபீஸ்,
நெ. 20, நம்மாள்வார் தெருவு, முதல் சந்து,
சௌகார்பேட்டை, சென்னை.

"விவேகபாநு" பஞ்சாங்கம்

விபவஹு கார்த்திகைமீ

கலியுகாதி—5030; சாலிவாகன—1851;
பசலி - 1338; ஹிஜிரி - 1348; கொல்லம்-1104.

இங்கிலீஷ் 1928ஹு
நவம்பர்—டிசம்பர்மீ

	குரு	ராகு	செ
	9-வி-பு 23-ம-சு 25 த-பு		
சுக்	சனி கே	பு	

தமிழ் தேதி	இங்கிலீஷ் தேதி	வாரங்கள்	திதிகள்	நட்சத்திரங்கள்	விசேடகாலங்கள்
1	16	வெள்	சவு 39-44	மூல 10-21	கரிநாள்
2	17	சனி	பஞ் 43-25	பூரா 16-46	ஸ்கந்தபஞ்சமிவிரதம்
3	18	ஞாயி	சஷ் 46-24	உத்ரா 21-11	கந்தர்சஷ்டி
4	19	திங்கள்	சப் 47-41	திரு 24-53	உபநயனம்செய்ய
5	20	செவ்	அஷ் 48-3	அவி 26-49	காலை10-க்குள்பூமிவாங்க
6	நவம்பர்மீ 21	புதன்	நவ 46-43	சத 27-14	கர்ணபூ[illegible]செய்ய
7	22	வியா	தச 44-21	பூர 27-19	வடக்கில்பிரயாணம்
8	23	வெள்	ஏகா 41-13	உத்தி 25-57	முகூர்த்தநாள்
9	24	சனி	துவா 37-8	ரேவ 23-39	விதைவிதைக்க
10	25	ஞாயி	திர 32-12	அசு 26-42	பரணிதீபம்
11	26	திங்க	சது 26-10	* பர 17-4	அண்ணாமலைதீபம்
12	27	செவ்	○ பௌ21-17	கிரு 13-11	வாகனங்கொள்ள
13	28	புதன்	பிர 15-11	ரோ 9-2	விவாகம்செய்ய
14	29	வியா	துதி 9-21	மிரு 4-57	தனியநாள்
15	30	வெள்	திரு 4-3	திரு 1-2	கிரகப்பிரவேசம்
16	1	சனி	பஞ் 53-39	பூச 54-46	விருந்துசாப்பிட
17	2	ஞாயி	சஷ் 49-56	ஆயி 52-51	கரிநாள்
18	3	திங்	சப் 48-11	மகம் 51-50	மந்திரோபதேசம்
19	4	செவ்	அஷ் 46-22	பூரம் 51-56	சித்திரமெழுத
20	5	புதன்	நவ 45-49	உத்ர 53-21	வித்யாரம்பம்செய்ய
21	6	வியா	தச 46-54	அஸ் 55-21	கெர்ப்பாதானம்
22	7	வெள்	ஏகா 49-13	சித் 55-11	சர்வஏகாதசி
23	8	சனி	துவா 52-2	சுவா 69-12	வடக்கில்பிரயாணம்
24	டிசம்பர்மீ 9	ஞாயி	திர 57-19	சுவா 4-48	பத்திரிகைஆரம்பம்
25	10	திங்க	சது 60-4	விசா 10-21	சுபசோபனநாள்
26	11	செவ்	● சது 2-56	அனு 16-46	அமாவாசை
27	12	புதன்	அமா 8-21	கேட் 22 10	சூளைக்குநெருப்பிட
28	13	வியா	பிர 12-49	மூல 29-27	கீதாரம்பம்செய்ய
29	14	வெள்	துதி 17-29	பூரா 34-48	கடன்தீர்க்க

PRINTED AND PUBLISHED BY T. C. NAIDU, AT MURAHARI PRESS,
20, NAMMALWAR STREET, 1ST LANE, SOWCARPET, MADRAS.
Editor—S. K. GOVINDASWAMY PILLAI.